Follow us:

# தமிழன்

THAMILAN தமිළන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 10 சோபகிருது வருடம், ஆனி மாதம் 20ஆம் திகதி புதன்கிழமை
(05.07.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 16, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## குருந்தூர்மலையில் மேலதிக கட்டுமானப் பணிகளா?

நீதிபதி நேரில் சென்று கள ஆய்வு

02 பக்கம்

## லிட்ரோ எரிவாயு விலை குறைப்பு



கே. சுபானி

லிட்ரோ எரிவாயு நிறுவனம் நேற்று (04) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும்வகையில் அதன் விலைகளை குறைத்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 204 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை இரண்டாயிரத்து 982 ரூபாவாக நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

02 பக்கம்

## பொது இணக்கப்பாடு ரணிலுடன் கிடையாது

### சஜித்தை ஜனாதிபதியாக்கும் எண்ணம் அவருக்கு இருப்பதாக கூறுகிறார் சாகர



நா. தினுஷா

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இருந்த எஞ்சிய பதவிக் காலத்தை ஆட்சி செய்வதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்தோம். அதற்கு அப்பால் ரணிலுக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் எவ்வித பொது இணக்கப்பாடும் மேற்கொள்ளப்படவில்லை. அவரின் கொள்கைகள் வேறுபட்டவை. எமது கொள்கைகள் வேறுபட்டவை. அவ்வாறு இருக்கையில்,...

02 பக்கம்

# ஈ.பி.எவ். பேராபத்தில்!

## 2038ஆம் ஆண்டுக்குள் 12 இலட்சம் கோடி ரூபாவை இழக்க நேரிடும் - பொருளியல் நிபுணர் நிஷான் டி மெல் எச்சரிக்கை

நமது நிருபர்

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டினால் எதிர்வரும் 2038ஆம் ஆண்டுக்குள் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து 12 இலட்சம் கோடி ரூபாவை இழக்க நேரிடும் என பொருளியல் துறைசார்ந்த சிரேஷ்ட நிபுணர் கலாநிதி நிஷான் டி மெல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு நேற்று (04) அளித்த செவ்வியின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு காரணமாக ஓய்வூதிய நிதியிலிருந்து கணிசமான தொகையை இழக்க வேண்டிவரும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஊழியர் சேமலாப நிதி, ஓய்வூதிய நிதி ஆகியவற்றில் கடந்த மே மாதம் 31ஆம் திகதி நிலவரப்படி பிணை முறிகள்மூலம் வழங்கப்படும் கடன்களுக்கு சராசரியாக 13.5 வீத வட்டியை அரசாங்கம் பெற்றுவந்தது. அதனை 9.1 வீதமாகக் குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

02 பக்கம்



## கடன் மறுசீரமைப்பு: அதிவிசேட வர்த்தமானி வெளியீடு



நா. தினுஷா

திறைசேரி முறிகளின் உருவாக்கம் மற்றும் வெளியீட்டில் கூறப்பட்ட ஏதேனும் செலவுகளைச் செலுத்துகின்ற நோக்கத்துக்கு அவசியமான திறைசேரி முறிகளைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்குவதற்கும் வெளியிடுவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுக் கடன் பதிவாளருக்கு அதிகாரமளிக்கப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

02 பக்கம்

## உலக வங்கியிடமிருந்து 250 மில். டொலர் நிதி

கே. சுபானி

உலக வங்கியின் இலங்கைக்கான வரவு-செலவுத் திட்ட ஆதரவின் முதல் படிமுறையாக 250 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைக்கப்பெற்றுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நேற்று (04) தெரிவித்தார்.

உலக வங்கியின் பணிப்பாளர் சபையானது கடந்த ஜூன் மாதம் 28ஆம் திகதி 700 மில்லியன் டொலர் நிதியுதவியை இலங்கைக்கு வழங்குவதாக உத்தரவாதம் அளித்திருந்தது. பாரிய பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி நிலைபேறான பொருளாதாரத்தைப் பேணுதல், பொருளாதாரப் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள மக்களை அதிலிருந்து மீட்டெடுக்கும் நலன்புரித் திட்டங்களை உருவாக்குதல் ஆகியவற்றுக்காக இந்த நிதி பயன்படுத்தப்பட வேண்டியது தொடர்பில் இலங்கைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

02 பக்கம்

## நுவரெலியாவில் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை

### 13 குடும்பங்கள் பாதிப்பு

ஆ.ரமேஸ்

காலநிலை மாற்றத்தின் காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் நேற்று (04) மதியம் வரை 13 குடும்பங்களை சேர்ந்த 49 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலைய பணிப்பாளர் நிஹால் பண்டார தெரிவித்தார்.

அந்த மாவட்டத்தில் ஜூலை 01ஆம் திகதி முதல் 04ஆம் திகதி மதியம்வரை இடைவிடாது அடைமழையுடன் கூடிய காற்றும் வீசி வருகிறது. இதன் காரணமாக அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவு மற்றும் நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவுகளில் பல பாதிப்புகள் இடம்பெற்றுள்ளன.

அந்த வகையில், நுவரெலியா மாவட்டம் அம்பகமுவ பிரதேச செயலகத்துக்குரிய...

02 பக்கம்

## மேல்மாகாண கட்டடங்களுக்கு நில நடுக்கத்தினால் பாதிப்பு

கே. சுபானி

தென்கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் மேல் மாகாணத்திலுள்ள உயரமான கட்டடங்களில் பாதிப்பு ஏற்படலாம் என்பதால் நாட்டிலுள்ள புதிய மற்றும் பழைய உயரமான கட்டடங்களை வகைப்படுத்த வேண்டும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் அத்துல சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் கடற்பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் நாட்டில் பல்வேறு பகுதிகளில் உணரப்பட்டது. குறிப்பாக கொழும்பு உள்ளிட்ட மேல் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் இந்நிலநடுக்கம் உணரப்பட்டது.

இந்நிலையில் மேற்படி கட்டடங்கள் நிலவமைப்புக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளனவா மற்றும் நிலநடுக்கங்களுக்கு ஏற்ப நிர்மாணிக்கப் பட்டுள்ளனவா? என்பதை இவ்வகைப் படுத்தலின்...

02 பக்கம்

## 87 பில்லியன் ரூபா வங்கிகளுக்கு நட்டம்

### கடன் மறுசீரமைப்பு குறித்து கம்மன்பில எச்சரிக்கை

நா. தினுஷா

கடன் மறுசீரமைப்பினால் நாட்டின் வங்கிக் கட்டமைப்புக்கு தாக்கம் ஏற்படாது என்று அரசாங்கம் கூறினாலும், இந்தக் கடன் மறுசீரமைப்பினால் வங்கிகளுக்கு 87 பில்லியன் ரூபாவுக்கும் அதிக நட்டம் ஏற்படுமென்று பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (04) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

02 பக்கம்

## உஷ்



பொலிஸ் மா அதிபர் பதவியில் கண்வைத்திருக்கும் தேசத்தின் பெயரால் ஆரம்பிக்கும் பெயர்கொண்ட அந்த மூத்த பொலிஸ் உயரதிகாரி ஐ.ஜீ.பி. பதவி கிடைக்க வேண்டுமென நல்லூர் கோவிலுக்கு நேரடியாகச் சென்று நேர்த்தி வைத்துள்ளாராம்.

பொலிஸ் உயரதிகாரி என்றாலும் பாதுகாப்பு தரப்பினருக்கு எதுவித முன்னறிவித்தலுமின்றி, சத்தம் சந்தடியில்லாமல் தமிழ் வர்த்தகர் ஒருவரின் உதவியுடன் சென்று திரும்பியுள்ளார் அந்த மூத்த அதிகாரி.

எப்படியோ இப்போதுள்ள பொலிஸ் மா அதிபருக்கு சேவை நீடிப்பு வழங்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசுக்கெதிரான சுவரொட்டிகள் தேசிய வைத்தியசாலையில்



த. யுவராஜ்

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அறையொன்றில் அரசாங்கத்துக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பல சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை நேற்று (04) கைப்பற்றியுள்ளதாக மருதானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லானவின் அறிவித்தலின்பேரில் குறித்த ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

02 பக்கம்

## பழுகாமத்தில் கடையை உடைத்து திருட்டு

### உரிமையாளர் கதிர்காமம் சென்றபோது கைவரிசை



கனகராசா சரவணன்

கதிர்காம கந்தனை தரிசிப்பதற்காக தனது கடையை பூட்டிச் சென்ற நிலையில், பலசரக்கு கடையின் கதவை உடைத்து அங்கிருந்த பணம் மற்றும் பொருட்களை திருடர்கள் திருடிச் சென்ற சம்பவம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிலுள்ள...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



பழுகாம முதலாளி கதிர்காமத்தில இருக்கிறதா குடும்பத்தோட பேஸ்புக்கில படம் ஏதும் போட்டிருப்பார்..

அதிதுரித

Dialog HOME BROADBAND

வீட்டிற்கு Wi-Fi ரீலோட்

வீட்டிற்கு Wi-Fi RELOAD

இணைப்புடன் ரவுட்டர் ரூ.5990/-

மாதத்திற்கு 20GB ரூ.540/-

2 வாரங்களுக்கு 10GB ரூ.299/-

செயற்படுத்தல் ரீலோட் அல்லது MyDialog App மூலம்

Dialog

எதிர்காலம் இன்றே.

# ஜனாதிபதி என்ன பேசப்போகிறார் என்பதை அவர் அறிவிக்க வேண்டும்

## ரணிலின் அழைப்புக்கு ஐக்கிய மக்கள் சக்தி பதில்

நா.தினுஷா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று அவருடன் கலந்துரையாடலுக்குச் செல்வதா இல்லையா என்பதை பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் மத்திய செயற்குழு உறுப்பினர்களுடனும் கலந்துரையாடியே தீர்மானிக்க வேண்டும். ஆனால், எங்களுடன் அவர் என்ன பேசப் போகிறார் என்பதை முதலில் அறிவிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (04) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

தம்முடன் இணையுமாறும் இணைந்து செயற்பட்டால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னோக்கிச் செல்லலாம் என்றும் ஜனாதிபதியினால் விடுக்கப்பட்டுள்ள அழைப்புத் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி செயற்குழுவில் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால், ஜனாதிபதி இதற்கு முன்னரும் எங்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார். ஆனால், கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்தால் அவர் பங்குபற்ற மாட்டார்.எனவே, இதனூடாக அவர் அரசியல் இலாபத்தை எதிர்பார்க்கிறாரா என்பது புரியவில்லை. அவரின் நோக்கம் என்னவென்பது எங்களுக்குப் புரிகிறது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலே அவரின் இலக்காக அமைந்துள்ளது. இருந்தபோதும் நாட்டுக்கான தீர்மானங்களை நாங்கள் நிறைவேற்ற 21ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டபோதும் நாணய நிதியத்தின் உதவியை பெறும் யோசனையின் போதும் ஆதரவாகவே வாக்களித்திருந்தோம். சரியான விடயங்களுக்கு ஆதரவளிப்பதும் தவறான விடயங்களை எதிர்ப்பதுமே எங்களின் கொள்கையாகும். அடிப்படை வாதமாக செயற்படுவது எங்களின் கொள்கையல்ல.

நாட்டுக்காக ஜனாதிபதியுடனான கலந்துரையாடலை தட்டிக்கழிக்க மாட்டோம். நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்கு சரியான வேலைத்திட்டமிருந்தால் அதுதொடர்பில் கலந்துரையாட முடியும். எங்களுக்கு எந்த சிக்கலும் இல்லை. இருந்தபோதும், எங்களுடன் என்ன பேசப் போகிறார் என்பதை அவர் அறிவிக்க வேண்டும்.

எதிர்க்கட்சி தலைமைப் பதவியை அவர் பாதுகாத்துக்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியை பெற்றுக்கொள்வதே எங்களின் திட்டமாகும் என்றார்.

## குருந்தூர்மலையில்...

முல்லைத்தீவு செய்தியாளர்

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் மேலதிகமாக தொடர்ந்தும் மேம்படுத்தல் வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா குருந்தூர் மலைக்கு நேற்றைய தினம் களவிஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

அத்தோடு குறித்த களவிஜயத்தைத் தொடர்ந்து பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களத்தினர் ஆகியோரது பதில் அறிக்கைக்காக குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஒகஸ்ட் 08ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குருந்தூர்மலை தொடர்பாக வழக்கிலக்கம் யுசு/673/18 இல் தொடரப்பட்டுள்ள வழக்கில், 12.06.2022இற்கு முன்னிருந்த நிலையை பேணுமாறும் அதற்குமேல் கட்டுமானப் பணிகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாதென முல்லைத்தீவு நீதிமன்றம் 19.07.2022அன்று கட்டளை பிறப்பித்திருந்தது.

எனினும், நீதிமன்றம் இவ்வாறு கட்டளை வழங்கிய பிற்பாடும் நீதிமன்றக் கட்டளையை மீறி குருந்தூர்மலையில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக கடந்த 23.02.2023 அன்று குருந்தூர் மலைக்கு, தண்ணிமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்களும் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் சிலரும் கள விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த விஜயத்தின்போது இவ்வாறு நீதிமன்றத்தின் கட்டளைகள் மீறப்பட்டு தொடர்ந்தும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப் படுவது உறுதிசெய்யப்பட்டது.



இந்நிலையில் இவ்வாறு நீதிமன்றக்கட்டளைகள் மீறப்பட்டு தொடர்ந்தும் பௌத்த விகாரை அமைக்கும் பணிகள் இடம்பெறுவது தொடர்பில் களவிஜயத்தில் ஈடுபட்டவர்களுள் ஒருவரான வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனால் கடந்த 23.02.2023அன்றையதினமே முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை அதனைத் தொடர்ந்து 02.03.2023அன்று முல்லைத்தீவு நீதிமன்றில் யுசு/673/18 என்னும் வழக்கிலக்கத்தில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டு கட்டுமானப்பணிகள் இடம்பெறுகின்றமை தொடர்பில் புகைப்பட ஆதாரங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு முறையீடு செய்யப்பட்டது.

இந் நிலையில் அவ்வாறு குருந்தூர்மலையில் மேலதிகமாக மேம்படுத்தல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் கண்காணிப்பதற்கு நேற்று(04)முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா களவிஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

குறித்த களவிஜயத்தின்போது குருந்தூர்மலையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற மேம்படுத்தல் லேலைகள் தொடர்பில் நீதிபதியால் ஆராயப்பட்டுள்ளது.

அதேவேளை பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களம் இது தொடர்பான பதில் அறிக்கை ஒன்றினை வழங்குவதற்காக எதிர்வரும் ஒகஸ்ட் 08ஆம் திகதி வரை விசாரணையை நீதிபதி ஒத்திவைத்துள்ளார்.

மேலும் நீதிபதி இவ்வாறு குருந்தூர்மலைக்கு களவிஜயம் மேற்கொண்டிருந்தபோது, அங்கு பாராளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, செல்வராசா கஜேந்திரன், வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், தண்ணிமுறிப்பு மக்கள், குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் உள்ளிட்டவர்களும் அங்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மேல் மாகாண கட்டடங்களுக்கு...

மூலம் அறிந்துகொள்ள முடியும்.

கட்டடங்களின் அடித்தளம் உரிய முறையில் இடப்பட்டுள்ளனவா என்பதன் அடிப்படையில் ஆபத்தான நிலையிலுள்ள கட்டடங்கள் அடையாளம் காணப்பட்டு அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

## நுவரெலியாவில்...

ஹட்டன் மேற்கு, ஹட்டன் வடக்கு, ரொசல்ல, செனன் ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் அதிக காற்று, சாதாரண மண்சரிவுகள் ஆகிய அனர்த்தத்தினால் 09 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல நுவரெலியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட கொட்டகலை டிரேட்டன், யுனிபீல்ட், குடாஓயா,மிஹிந்துபுர ருவான் எளிய ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் மண்சரிவு மற்றும் வீட்டு சுவர் இடிபாடு அனர்த்தம் காரணமாக 04 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மொத்தம் 13 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அதேநேரத்தில் அம்பகமுவ பிரதேசத்தின் மஸ்கெலியா மரே தோட்டத்தில் மக்கள் குடியிருப்பு பகுதியில் பாரிய கல் ஒன்று சரியும் அபாயம் உள்ளதால் பாதுகாப்புக் கருதி 10 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேரை இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலைய பணிப்பாளர் நிஹால் பண்டார தெரிவித்தார்.

மேலும் நுவரெலியா மீப்பிலிமான பகுதியில் நேற்றுக் காலை பாரிய மரம் ஒன்று சரிந்து விழுந்துள்ளது.

இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. அதேநேரத்தில் மரத்தை அகற்றும் பணியில் ஊர் மக்கள் மற்றும் அதிரடிப் படையினர் ஈடுபட்டு போக்குவரத்து சீர்செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பழுகாமத்தில்...

பழுகாமம் பகுதியில் நேற்று (04) அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தக் கடையின் உரிமையாளர் கடையை பூட்டிவிட்டு கதிர்காம கந்தனை தரிசிக்க சென்றுள்ள நிலையில் கடையின் கதவு உடைக்கப்பட்டுள்ளதை அப்பகுதி மக்கள் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த பகுதிக்கு தடயவியல் பிரிவு பொலிஸார் அழைக்கப்பட்டு விசாரணை முன்னெடுத்துவரும் நிலையில் பணம் வைத்துள்ள பெட்டி உடைக்கப்பட்டு அங்கு பணம் திருட்டுப் போயுள்ளதாகவும் கடை உரிமையாளரை தொடர்பு கொண்டபோது கதிர்காமத்தில் இருப்பதாகவும் அவர் திரும்பி வந்த பின்னர் ஏனைய பொருட்கள் திருட்டுபோயுள்ளதா என கண்டறியமுடியும் என பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## லிட்ரோ எரிவாயு...

விலைக்குறைப்பின் அடிப்படையில், 5 கிலோகிராம் எடையுடைய லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 83 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை ஆயிரத்து 198 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.இதேபோன்று 2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 37 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 561 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்புதிய விலை நிர்ணயத்தின் அடிப்படையில் இன்று (05) முதல் எரிவாயு சிலிண்டர்கள் விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உலக வங்கியிடமிருந்து...

இதில் 200 மில்லியன் டொலரை பொருளாதார ரீதியில் நலிவடைந்துள்ள மக்களுக்கு சிறந்த வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலான நோக்கத்துக்கு பயன்படுத்தப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையிலேயே முதலாவது கட்டமாக 250 மில்லியன் டொலர் நிதியுதவி இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசுக்கெதிரான...

அந்த அறையில் பல்வேறு வாசகங்கள் அடங்கிய 136 சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் இருந்ததாகத் தெரிவித்துள்ள மருதானை பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 87 பில்லியன் ரூபா...

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடன் மறுசீரமைப்பினால் வங்கிகளுக்கு பாதிப்பு இல்லை என்று அரசாங்கம் கூறினாலும் அரசாங்கத்தின் அமைச்சரவைப் பத்திரம் மற்றும் கருத்து நோக்கத்தை ஆழ்ந்து அவதானிக்கும்போது அது பொய் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஜூன் மாதம் 28 ஆம் திகதி கடன் மறுசீரமைப்பு என்ற போர்வையில் நிதி அமைச்சரினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தின் மூன்றாவது பக்கம் வரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கமைய நிரப்பப்படவேண்டியுள்ள இலங்கை அபிவிருத்தி பிணையங்களின் பெறுமதி 886 டொலர் மில்லியன் அல்லது 272 பில்லியன் ரூபாவாகும். மத்திய வங்கியினால் அமைச்ரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசைனயின் 29 ஆவது பக்கத்துக்கமைய பிணைமுறிகளின் பெறுமதியில் 30 சதவீதம் குறைக்கப்படும். அதாவது, 81.1 பில்லியன் ரூபா மூலதன குறைப்பு இடம்பெறும்.

அபிவிருத்தி பிணைமுறிகளில் 85 சதவீதமானவை வங்கிகளுக்கு உரித்தானவை. அதற்கமைய, மூலதன குறைப்பால் மாத்திரம் வங்கிகளுக்கு 69 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படும். இதற்கு மேலதிகமாக, வங்கிகளினால் அரச நிறுவனங்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள டொலர் கடன் தொகை 323 மில்லியன் டொலர் அல்லது 92 பில்லியன் ரூபாவாகும். அந்த தொகையிலும் 30 சதவீதம் குறைக்கப்படும். அதாவது 28 பில்லியன் ரூபா குறைக்கப்படும். பிணைமுறி மற்றும் டொலர் கடன் ஆகிய இரண்டில் இடம்பெறும் மூலதன குறைப்பினால் மாத்திரம் வங்கியொன்றுக்கு 97 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகின்றது. இதற்கு மேலதிகமாக வட்டியில் 35 சதவீதம் வரையில் குறைக்கப்படும். அதனூடாக வங்கியொன்றுக்கு ஏற்படும் நட்டத்தை எம்மால் கணக்கிடமுடியவில்லை. அதாவது, தேசிய கடன் மறுசீரமைப்பினூடாக வங்கிகளுக்கு ஏற்படும் நட்டம் 97 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும்.

நாட்டிலுள்ள 190 இலட்சம் ஊழியர் சேமலாப நிதிய கணக்குகளையும் மத்திய வங்கியே முகாமைத்துவம் செய்கிறது. அதிக இலாபத்தை ஈட்டும் பாதுகாப்பான முதலீட்டாளர்களின் முதலீடுகளில் முதலீடு செய்து ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களுக்கு உயர் வட்டி வீதத்தை பெற்றுக்கொடுக்க வேண்டியது மத்திய வங்கியின் பொறுப்பாகும். எமது சேமலாப நிதிய கணக்குகளை மத்திய வங்கி முகாமைத்துவம் செய்யும் அதேவேளை, மத்திய வங்கி அதிகாரிகளுக்கென தனியான சேமலாப நிதியமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

2022ஆம் ஆண்டே நாட்டின் வரலாற்றில் அதிகளவு வட்டி வீதம் பதிவிடப்பட்ட வருடமாகும். பிணைமுறி மற்றும் திறைசேரி முறிகளின் வட்டி வீதம் 32 சதவீதம் வரையில் அதிகரித்திருந்தது. 2022ஆம் ஆண்டு மத்திய வங்கி சேமலாப நிதியத்தில் முதலீடு செய்து பெற்றுக்கொண்ட இலாபம் சகல உறுப்பினர்களினதும் கணக்குகளுக்கும் 29 சதவீத வட்டி வருமானம் 29 சதவீதத்தால் வரவு வைக்கப்பட்டிருந்தது. இருந்தபோதும் அந்த மத்திய வங்கியே முகாமைத்துவம் செய்யும் மக்களின் சேமலாப நிதி வருமானத்தில் உறுப்பினர்களுக்கு 9 சதவீத வட்டி வருமானம் மாத்திரமே பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் நிதியங்களில் அதிக இலாபமீட்டும் இடங்களில் முதலீடு செய்து மக்களின் நிதியங்களில் குறைந்த இலாபம் பெறும் இடங்களிலும் முதலீடு செய்வது அநீதியான செயற்பாடாகும். சிறைத்தண்டனை வழங்கக்கூடிய நம்பிக்கை மீறல் குற்றத்தையே மத்திய வங்கி அதிகாரிகள் செய்துள்ளனர். இந்த அநீதி தொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் நாட்டுக்கு தெளிவுபடுத்தலை வழங்க வேண்டும். அதுபோன்று இந்த குற்றம் மீண்டும் இடம்பெறாமலிருக்க வேண்டுமெனில் மத்திய வங்கி அதிகாரிகளின் சேமலாப நிதியத்தை பொது மக்களின் சேமலாப நிதியத்துடன் இணைத்து ஒரே நிதியமாக முகாமைத்துவம் செய்ய வேண்டும் என்பதே எங்களின் யோசனையாகும்.

2022ஆம் ஆண்டிலேயே ஊழியர் சேமலாப நிதியம் வரலாற்றில் அதிக இலாபத்தை அடைந்துள்ளது. 357 பில்லியன் ரூபா இலாபத்தை பெற்றுக்கொண்டுள்ளது. இருந்தபோதும் இந்த வருமானத்தை வருமான வட்டியாக உறுப்பினர்களின் கணக்குளில் வரவு வைக்காமைக்கு காரணம், கடன் மறுசீரமைப்பின்போதே சேமலாப நிதியத்தை பலிகொடுப்பதற்கு அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே திட்டமிட்டிருந்ததா என்ற சந்தேகமும் ஏற்படுகிறது என்றார்.

## பொது இணக்கப்பாடு...

அவரின் புதிய லிபரல்வாத கொள்கையை எதிர்காலத்துக்கு கொண்டு செல்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை ஜனாதிபதியாக்கும் எண்ணம் ஒருவேளை ரணிலுக்கு இருக்கலாம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார். அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (04) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டில் அப்போதிருந்த நிலைமை, தேவைக்கு ஏற்ப கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இருந்த எஞ்சிய பதவிக் காலத்தை ஆட்சி செய்வதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்தோம். இந்த நிலைப்பாட்டிலேயே நாங்கள் ஆரம்பத்திலிருந்து இருந்து வருகிறோம். இதற்கு அப்பால் எதிர்காலத்தில் என்ன செய்வது என்பது தொடர்பில் ஒரு பொது இணக்கப்பாட்டுக்கோ உடன்பாட்டுக்கோ இதுவரையில் வரவில்லை.

அதேபோன்று, நாங்கள் நம்பும் கொள்கைகள் வேறுபட்டவை. தேசிய பொருளாதாரத்தினூடாக நாடு கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதுடன் கிராமங்களில் இருக்கும் ஏழை மக்களை பலப்படுத்துவதினூடாகவே நாட்டின் மொத்த பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப முடியும் என்பதே எங்களின் நம்பிக்கையாகும்.

ஆனால், புதிய லிபரல் பொருளாதார கொள்கையினூடாக எமது நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நம்பிக்கையாகும். ஆகவே, அந்த நிலைப்பாட்டை தொடர்ந்து எதிர்காலத்துக்கு எடுத்துச் செல்லக்கூடிய தலைவராகவே சஜித் பிரேமதாச இருக்கிறார். அதற்கமைய, ஒருவேளை இந்த நாட்டின் ஜனாதிபதி பதவியை எதிர்காலத்தில் சஜித் பிரேமதாச வகிக்கவேண்டும் என்று ஜனாதிபதி எண்ணலாம் என கருதுகிறோம். எங்களுக்கும் தெரியாது,செய்திகளினூடாகவே அறிந்து கொண்டோம்.இருந்தபோதும் எங்கள் கட்சி, எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பக் கூடிய தலைவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கும். அந்த வேட்பாளர் யார் என்பதற்கு மாறாக அவர் இணக்கம் தெரிவிக்கும் கொள்கையே எங்களுக்கு அவசியமாகும். நாங்கள நம்பும், மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைத் திட்டம் எங்களிடம் இருக்கிறது. அந்த கொள்கைத் திட்டத்துக்கு இணங்குபவருக்கு மாத்திரமே நாங்கள் ஆதரவளிப்போம் என்றார்.


# வெளிவந்துவிட்டது!

## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை விசேட மாதிரி வினாத்தாள் தொகுப்பு




பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு...

பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

076139305 / 0741684643
0761393805


## கடன் மறுசீரமைப்பு:...

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதியினால் தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நேற்று முன்தினம் (03) வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வர்த்தமானியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொதுப் படுகடன் நிலைபேறான தன்மையை உறுதி செய்வதற்கும் அதனூடாக பொருளாதார மீட்சிக்கான விரைவான நிலைமாற்றலையும் அதனைத் தொடர்ந்து இலங்கை மக்களுக்கும் எதிர்கால தலைமுறையினருக்கும் நன்மைபயக்கும் நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கும் குடியரசின் உள்நாட்டுப் பொதுப்படுகடன் மேம்படுத்தப்பட வேண்டுமென்ற கடந்த ஜூன் 28 ஆம் திகதி மேற்கொள் ளப்பட்ட அமைச்சரவையின் தீர்மானத்தை அனுசரித்து, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம் தீர்மானித்துள்ளதுடன், உள்நாட்டுப் பொதுப்படுகடன் மேம்படுத்தலை நடைமுறைப் படுத்துவதற்கு வேண்டப்பட்ட அனைத்து அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 55 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான நான் இத்தால் பின்வருமாறு ஒழுங்குவிதிகளை ஆக்குகின்றேன்.

1. இவ்வொழுங்குவிதிகள் 2023ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கப் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் (பிணையங்களை மாற்றுதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுப் படுகடன் பதிவாளருக்கு:-

2.1 கட்டளைச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் வெளியிடப்பட்ட ஏதேனும் பங்குத்தொகுதி அல்லது பிணையங்களின் எவரேனும் உடமையாளருக்கு விடயத்துக்கு ஏற்ப 2023, ஜூன் 28 ஆம் திகதி அன்று இருப்பிலுள்ள அல்லது அதன் பகுதியை மாற்றுகின்ற அல்லது பரிவர்த்தனையில் ஈடுபடுகின்ற தெரிவினை வழங்குவதற்கு,

2.2 கட்டளைச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் வெளியிடப்பட்டு உடமையாளர்களினால் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதி அல்லது பிணையங்களை விடயத்துக்கு ஏற்ப இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட வேண்டிய திறைசேரி முறிகளுக்கு மாற்றுவதற்கு அல்லது பரிவர்த்தனை செய்வதற்கு, 2.3 கட்டளைச் சட்டத்தின் கீழ் விடயத்துக்கு ஏற்ப வட்டிக் கொடுப்பனவுகள் எம்முறையில் செலுத்தப்பட வேண்டுமென்பதனையும் எத்தகைய திறைசேரி முறிகள் மாற்றப்படலாம் அல்லது பரிவர்த்தனையில் ஈடுபடுத்தப்படலாம் என்பவற்றுக்குட்பட்ட நிபந்தனைகளையும் குறித்துரைப்பதற்கு, நான் இத்தால் பிரகடனப்படுத்தி அதிகாரமளிக்கின்றேன்.

3. மேலே ஒழுங்குவிதி 2 இன்கீழ் பிரகடனப்படுத்தப்பட்டு அதிகாரமளிக்கப்பட்டவாறு பிணையங்களின் மாற்றலுக்கு அல்லது பரிவர்த்தனைக்கு அவசியமாகின்றவாறான திறைசேரி முறிகளின் அத்தகையதொரு தொகையைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்குவதற்கும் வெளியிடுவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுப் படுகடன் பதிவாளருக்கு நான் இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

4. ஏதேனும் பங்கு அல்லது பிணையங்கள் தொடர்பில் இலங்கையில் நடைமுறையிலுள்ள எழுதப்பட்ட ஏதேனும் சட்டத்தின் தத்துவங்களின் பண்பினால் சகல சிறப்புரிமைகள், விலக்களிப்புக்கள் மற்றும் விடுபாட்டுரிமைகள் விடயத்துக்கு ஏற்ப மாற்றலில் அல்லது பரிவர்த்தனையில் இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்படுகின்ற ஏதேனும் புதிய பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி அல்லது பிணையங்களுடன் இணைவதாக கருத்திற் கொள்ளப்பட வேண்டுமென நான் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

5. இவ்வொழுங்குவிதிகளினால் அதிகாரமளிக்கப்பட்டவாறு திறைசேரி முறிகளின் உருவாக்கத் தில் மற்றும் வெளியீட்டில் கூறப்பட்ட ஏதேனும் செலவுகளைச் செலுத்துகின்ற நோக்கித்துக்கு அவசியமாகின்றவாறான அத்தகைய திறைசேரி முறிகளைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்குவதற்கும் வெளியிடுவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுப்படுகடன் பதிவாளருக்கு நான் இத்தால் அதிகாரமளிக்கின்றேன் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஈ.பி.எவ். பேராபத்தில்!...

எனவே, அரச கடன்களுக்கு 13.5 வீத வட்டி வழங்கப்பட்டால் அந்த நிதியின் மதிப்பு 2038 ஆம் ஆண்டாகும்போது 25 ட்ரில்லியன் ரூபாவாக அதிகரிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், தற்போது அந்த நிதியின் மதிப்பு 3.456 ட்ரில்லியனாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பினால் 9.1 வீதமாக வட்டியை குறைப்பதன் மூலம் 12 ட்ரில்லியன் இழப்பை சந்திக்க நேரிடும் என கலாநிதி நிஷான் டி மெல் எச்சரித்துள்ளார்.

# வாக்கெடுப்பில் பங்கேற்றார் சமல் ராஜபக்ஷ எம்.பி.

## உறுதிப்படுத்தினார் பாராளுமன்ற செயலாளர் நாயகம்



உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தலை நடைமுறைப் படுத்துவதற்கான தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ பங்குபற்றியதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை (01) இடம்பெற்றது. இதன்போது இறையாண்மைப் படுகடன் நிலைபெறுதன்மையை மீட்டெடுப்பதற்கு உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தலை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானம் மீதான வாக்கெடுப்பு 60 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் குறித்த வாக்கெடுப்பின்போது பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ சபையில் இருக்கவில்லை என ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்ட செய்திகள் முற்றிலும் உண்மைக்குப்புறம்பானது எனவும் அவர் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளதாகவும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர உறுதிப்படுத்தியுள்ளார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 20ஆம் நாள்**
**புதன்கிழமை**

**மேஷம்** உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள்; மற்றவர்கள் உங்களுக்குப் பணிந்து நடந்துகொள்வார்கள்.

**ரிஷபம்** உடல் உழைப்பு அதிகமாக இருக்கும் நாள். வயிறு தொடர்பான நோயால் அவதி.

**மிதுனம்** வீண் குழப்பங்களால் மனம் தளர்வடையும். கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

**கடகம்** புகழ் - செல்வாக்கு அனைத்தும் சிறப்பாக அமையும். திடீர் பயணத்தால் நன்மைகள் உள்ளன.

**சிம்மம்** எதிரிகளை வெற்றி கொள்வீர்கள். தொழில் முன்னேற்றம், பண லாபங்கள் உண்டு.

**கன்னி** உடல் நலத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள். அதிர்ஷ்டத்தை சோதித்து அவஸ்தைக்குள்ளாகாதீர்கள்.

**துலாம்** வாகனங்களில் அசட்டையாகப் பயணிக்காதீர்கள், குடும்ப உறவு திருப்திகரமாக இருக்கும்.

**விருச்சிகம்** முயற்சிகளில் வெற்றி மேல் வெற்றி உண்டு, இன்றைய தேவைக்குரிய பணம் நிச்சயம் கிடைக்கும்.

**தனுசு** வீட்டுத் தேவைக்காக செலவுகள் ஏற்படும். குடும்ப உறவுகளோடு சற்று நிதானமாக உரையாடுங்கள்.

**மகரம்** ஏதாவது நடந்துவிடுமோ என்ற அச்சத்தில் இருப்பீர்கள். தேவையற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிடாதீர்கள்.

**கும்பம்** ஆணவத்தால் அவமானம் ஏற்படும். உணவு, தூக்கமில்லாமல் சற்று அவதிப்படுவீர்கள்.

**மீனம்** எதிர்ப்பாராத பண வரவு மகிழ்ச்சியைக் கொடுக்கும். போட்டி -பந்தயங்களில் வெற்றிவாகை சூடுவீர்கள்.

**திதி :** துதியை மு.ப.10.02 வரை பின் திருதியை (தேய்)
**நட்சத்திரம் :** திருவோணம் பி.இ.2.56 வரை பின் அவிட்டம்
**யோகம் :** அமிர்த சித்த யோகம்
**வார சூலை :** வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம் :** மு.ப. 8.56– 9.56 மணி வரை
**ராகுகாலம் :** 11.56 – 1.26 மணி வரை
**எமகண்டம் :** 7.26 – 8.56 மணி வரை
**குளிகை :** 10.26 – 11.56 மணி வரை
**சந்திராஷ்டமம் :** மிதுன ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்
**தனஅதிஷ்டம் :** கார்த்திகை, உத்தரம், உத்தராடம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம் :** ------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**

# வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் புண்ணிய தலத்தில் ஜனாதிபதி வழிபாடு







ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் (03) பிற்பகல் வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் புண்ணிய தலத்துக்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கிரிவெஹெர விகாராதிபதி வண. கொபவக்க தம்மிந்த நாயக்க தேரரைச் சந்தித்த ஜனாதிபதி, அவர்களின் நலம் விசாரித்ததன் பின்னர் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

பின்னர் ஜனாதிபதி சமய நிகழ்வுகளில் கலந்துகொண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார். கதிர்காமம் வருடாந்த எசல பெரஹராவின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் பெரஹராவை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கந்துல ஹஸ்தி ராஜாவின் மீது தாது கலசத்தை ஸ்தாபித்தார்.

அதன்பின்னர் இறுதி பெரஹராவை பார்வையிட்ட ஜனாதிபதி, கதிர்காமம் சமன் தேவாலயத்துக்கும் சென்று ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார். கதிர்காமம் வருடாந்த எசல பெரஹராவை பார்வையிட விகாரைக்குச் சென்றிருந்த பக்தர்களுடனும் ஜனாதிபதி சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, கதிர்காமம் மகா தேவாலயத்தின் முன்னாள் பஸ்நாயக்க நிலமே, இராஜாங்க அமைச்சர் சசிந்திர ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக்க, இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் போஜ் ஹரன்போல, கொழும்பு மாநகரசபை முன்னாள் உறுப்பினர் கித்சிறி ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ஜூலை மாத இறுதியில் புதிய விநியோகஸ்தர்களின் முதலாவது எரிபொருள் கப்பல் வரும் - அமைச்சர் காஞ்சன அறிவிப்பு

பல்வேறு தரப்பினரின் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியிலும் கடந்த ஜூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட மின் விலைத் திருத்தத்தின் போது 60 இலட்சம் மின் பாவனையாளர்களில் 35 இலட்சம் மின் பாவனையாளர்களுக்கு அரசாங்கம் மின் கட்டணத்தில் 55% நிவாரணத்தை பெற்றுக்கொடுத்திருந்ததாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின் கட்டண திருத்தத்தின்போது வழிபாட்டுத் தலங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டிருந்ததென சுட்டிக்காட்டிய அமைச்சர், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களை ஆரம்பிப்பதற்கு தகுந்த சூழல் உருவாகியுள்ளதெனவும் தெரிவித்தார்.

'ஸ்திரமான நாட்டுக்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (04) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சியாக எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பதற்காக இரு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களையும் செய்துகொண்டுள்ளது. இம்மாத இறுதிக்குள் விநியோகச் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியும் என்பதோடு, அவர்களின் முதலாவது எரிபொருள் கப்பல் இம்மாத இறுதியில் இலங்கைக்கு வரவுள்ள நிலையில், புதிய விநியோகஸ்தர்களின் விநியோகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் காரணமாக இதுவரை நிதி நெருக்கடியில் இருந்த மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் நிதி ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் காஞ்சன விஜேசேகர,

"புதிய அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் பலனாக கடந்த காலத்தில் நாட்டில் காணப்பட்ட எரிபொருள் வரிசைகளை இல்லாமல் செய்து தொடர்ச்சியாக மின்வெட்டு செய்யப்படுவதையும் தடுக்க முடிந்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்திலும் ஜூன் மாதத்திலும் மின்சாரக் கட்டணத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. வீடுகளுக்காக மின்சாரத்தை பாவனை செய்வோர் எண்ணிக்கை 60 இலட்சமாக காணப்படுகின்றது. அவர்களில் 30 - 60 மின் அலகுகளை பாவனை செய்யும் 35 இலட்சம் பேருக்கு 55 ரூபாவினால் கட்டணக் குறைப்புச் செய்யப்பட்டது. அதேபோல் பதிவு செய்யப்பட்டிருக்கும் 40,000 வழிபாட்டுத் தலங்களில் 30 அலகுக்கும் குறைவாக பாவனை செய்யும் 15,000 வழிபாட்டுத் தலங்களுக்கும் தொழிற்றுறைகளுக்கும் கட்டணக் குறைப்பு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க அரசாங்கத்தினால் முடிந்தது.

கடந்த காலத்தில் மின்சார சபை 409 பில்லியன் நட்டமீட்டியிருந்தது. அவற்றில் கடந்த வருடத்தின் நட்டம் மாத்திரம் 167.2 பில்லியன்களாக பதிவாகியிருந்தது. அதனால் பல்வேறு நெருக்கடிகள் உருவாகியிருந்தன.

எவ்வாறாயினும் தற்போது அனைத்து விநியோகஸ்தர்களுக்குமான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன. மீள்புதுப்பிக்கத்தக்க மின் சக்தி வேலைத்திட்டங்களை புதிதாக ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 120 பில்லியன்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது. இருப்பினும் அரசாங்கம் அந்த தொகையை பொருட்படுத்தவில்லை.

அதனால் தற்போது மின்சார சபை நிதி ரீதியாக வலுவடைந்துள்ளது. கடந்த 03 வருடங்களாக கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது வரையில் புதிதாக கோரப்பட்டிருந்த 36,000 இணைப்புகளில் 20,000 மின் இணைப்புகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்த இரு மாதங்களில் மிகுதியான மின் இணைப்புகளும் பெற்றுக்கொடுக்கப்படும்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த வருடம் செப்டெம்பர் முதல் மசகு எண்ணெய் இறக்குமதியை மேற்கொண்டு வந்தது. அதன்படி தொடர்ச்சியாக எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பதற்காக இரு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களையும் செய்துகொண்டுள்ளது. இம்மாத இறுதிக்குள் விநியோகச் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியும் என்பதோடு, அவர்களின் முதலாவது எரிபொருள் கப்பல் இம்மாத இறுதியில் இலங்கைக்கு வரவுள்ளது. அதேபோல் அவர்களுடைய 150 எரிபொருள் நிறுவனங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவர்களது கப்பல் இலங்கைக்கு வந்த பின்னர் சிபெட்கோ என்ற பெயரில் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டாலும் எதிர்காலத்தில் அவர்களது நிறுவனத்தின் பெயரிலேயே விநியோகிக்கப்படும்.

இந்த நிறுவனங்களுக்கு எரிபொருளை விநியோகிக்கும்போது, ஒரு லீற்றர் எரிபொருளுக்கு 50 ரூபா வரி அறவிடுவதற்கு நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்மூலம் இந்தியா, ஈரானிடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை செலுத்தி முடிக்கும் அதேநேரம் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன்களையும் விரைவில் செலுத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய அனைத்து கடன்களையும் செலுத்தியுள்ளது. பெற்றோலிய கூட்டுத்தாபனம் தற்போது நிதி ரீதியாக பலமடைந்துள்ளது. ஆனால் அதன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் நிறுத்தப்படமாட்டாது. மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பான புதிய வரைவு தற்போது சட்ட வல்லுனர்களிடத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. வரைவு கிடைத்தவுடன் அதனை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதோடு அமைச்சரவையிலும் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் புதிய சட்டத்தை நிறைவேற்றிக்கொள்ளும் இயலுமை கிட்டும்.

இதனால் மின்சார சபை ஊழியர்களுக்கு எந்த நெருக்கடியும் இல்லை. NVQ தொழிற் பயிற்சித் தகைமைகளுடன் தற்போது தற்காலிகமாக சேவையில் அமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

எரிபொருள் விலை மாற்றத்தின்போது எண்ணெய் கையிருப்புகளை பேணத் தவறும் எரிபொருள் நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. காலை ராஜகிரிய எரிபொருள் நிரப்பு நிலையம் அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டது.

எரிபொருள் விலை மாற்றத்தின்போது எண்ணெய் கையிருப்பை தக்க வைக்கத் தவறிய 120 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பிலான முறைபாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் ஊழியர்களின் எண்ணிக்கை போதுமானதாக இருப்பதால் புதிய ஊழியர்களை சேவையில் இணைத்துகொள்ளாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியும் பிரதமரும் அரசாங்கமும் இணைந்து எடுத்த சரியான தீர்மானத்தின் பலனாக அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை வினைத்திறனுடன் முன்னெடுக்க முடிந்துள்ளது.



கடந்த காலங்களில் புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்காக கோரப்பட்ட விலைமனுக் கோரலுக்கான முதலீட்டாளர்கள் இதுவரையில் வரவில்லை. விலைமனுக்களை பெற்றுக்கொண்ட நிறுவனங்களும் வேறு நிறுவனங்களுக்கு அவற்றை விற்றுள்ளன. எனவே, அடுத்த அமைச்சரவை அமர்வின் போது 500 மெகாவோட் புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்கான விலைமனுக்கோரல் இரத்து செய்யப்பட்டு, புதிய விலைமனுக்கோரல் அறிவிக்கப்படும். மேலும் அதானி நிறுவனத்துக்கு 500 மெகாவோட் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை தயாரிப்பதற்கான அனுமதியும் வழங்கப்படவுள்ளது. அடுத்த வருடத்தில் அவர்களது உற்பத்தியை தேசிய மின் கட்டமைப்புக்குள் உள்வாங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் மின்சார சபையை மறுசீரமைக்க வேண்டும் என அந்த நிறுவனங்களின் பெரும்பாலான ஊழியர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். தொழிற்சங்கத் தலைவர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் கிடைக்காமல் போய்விடும் என்ற அச்சத்தினாலேயே அவர்கள் எதிர்ப்பை தெரிவிக்கின்றனர்.

ஆனால் நஷ்டத்தில் இயங்கும் நிறுவனத்தில் சம்பள உயர்வு, மேலதிக கொடுப்பனவு கோரிக்கை என்பவற்றை ஏற்க முடியாது. உலகின் எந்தவொரு நாடும் அவ்வாறு செய்யாது. எனவே அவ்வாறான செயற்பாடுகளை நாம் நிறுத்த வேண்டும். 24,000 மின்சார ஊழியர்களுக்கு 03 ஆண்டுகளுக்கு ஒருமுறை 25% சம்பள உயர்வு வழங்கப்படும். நாங்கள் அதனை நிறுத்தியுள்ளோம்.

செயல்திறனுடன் பணியாற்றும் ஊழியர்களுக்கு மாத்திரமே சம்பள உயர்வை வழங்க முடியும். அனைத்து ஊழியர்களுக்கும் சம்பள உயர்வை வழங்கும் நிறுவனங்கள் உலகில் எந்த நாட்டிலும் இல்லை.

ஏப்ரல், டிசம்பர் மாதங்களில் வழங்கப்படும் போனஸ் நிறுவனம் இலாபம் ஈட்டினால் மட்டுமே வழங்கப்படும். அதுவும் திறம்பட வேலை செய்யும் ஊழியர்களுக்கு மட்டுமே. ஏப்ரல் மற்றும் டிசம்பர் மாத போனஸ் கொடுப்பனவுகளும் நிறுவனங்கள் இலாபமீட்டினால் மட்டுமே வழங்கப்படும். அதுவும் செயல்திறன் மிக்க ஊழியர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும்.

மேலும், இந்திய கடன் உதவியின் கீழ் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு சூரிய சக்தி கட்டமைப்புகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, ஒவ்வொரு வழிபாட்டுத் தலங்களுக்கும் ஐந்து கிலோவாட் சூரிய சக்தியில் இயங்கும் மின் கட்டமைப்பை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அணுசக்தி தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதனை 2023-2042 மின் உற்பத்தி திட்டத்தில் இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதன் பலன்களை கருத்திற்கொண்டு நாம் எப்போது அணுசக்தி துறையை வலுப்படுத்துவது என்பது தொடர்பிலான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.


## வெற்றி நிச்சயம்



**"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.**

**உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/ Srimath Suwamiji/**



## மாத்தறை கிளை "புதிய இடத்திற்கு"



**பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களே,**
**வாடிக்கையாளர்களினதும் வியாபாரத்தினதும் துரித வளர்ச்சியுடன் நாம் முன்னிலும் பார்க்க சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன்,**
**2023 ஜூலை மாதம் 05ஆம் திகதி**
**இன்று தொடக்கம் எமது நிறுவனத்தின் மாத்தறை கிளையானது அதிக இடவசதியுடைய எமது கட்டிடத்தின் புதிய இடத்திற்கு நகர்கின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.**

எமது புதிய முகவரி
**இல. 225, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.**

தங்களின் அனைத்து நிதித்தேவைகளுக்கும் எமது புதிய கிளைக்கு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி,
முகாமைத்துவம்,
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி.**

**மாத்தறை கிளை - தொலைபேசி : 0412 223 352**

COMMERCIAL CREDIT

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூலை 05ஆம் திகதி, புதன்கிழமை

# பாரிஸ் பதற்றமும் மக்கள் போராட்டமும்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை ஆட்சியிலிருந்து அகற்ற ஓராண்டுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற காட்சிகளை ஒத்த காட்சிகள் தற்போது பிரான்ஸில் இடம்பெற்று வருவதைக் காண முடிகின்றது. பொலிஸாவது, இராணுவமாவது என்று கட்டுப்பாடுகளையெல்லாம் மீறி மக்கள் வீதிகளில் இறங்கி வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பிரான்ஸில் கடந்த ஒரு வாரமாக நடைபெற்று வரும் கலவரம் உலகம் முழுவதும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தலைநகர் பாரிஸ் பற்றியெரியும் காட்சிகள் பதற்றம் மிகுந்தவையாக இருக்கின்றன. ஜனாதிபதி இம்மானுவல் மேக்ரான், பல அவசர ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி நடவடிக்கை மேற்கொண்டாலும் வன்முறை தொடர்கிறது.

பாரிஸின் புறநகர்ப் பகுதியான நான்டேன் நகரில் நஹேல் என்ற இளைஞர் பயணித்த காரை இரு காவலர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை சோதனையிடச் சென்றனர். போக்குவரத்து நெரிசலில் நின்றிருந்த அந்தக் காரில் நஹேலுடன் மேலும் இருவர் இருந்தனர். துப்பாக்கியை நீட்டியபடி அந்தக் காரை பொலிஸார் அணுகியபோது, அவர்களது உத்தரவுக்குக் கட்டுப்படாமல் காரை நஹேல் வேகமாக செலுத்த ஆரம்பித்தபோது மிக நெருக்கத்தில் ஒரு காவலர் சுட்டதில் நஹேல் உயிரிழந்தார்.

சுட்டுக் கொல்லப்பட்ட நஹேல், அரபு நாடான அல்ஜீரியாவை பூர்விகமாகக் கொண்டவர். அவரது படுகொலை மிகப்பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தி கலவரமாக உருவெடுத்துள்ளது. சாலையில் தடுப்புகளை ஏற்படுத்தல், கார்களுக்குத் தீ வைத்தல், சூறையாடுதல் போன்ற கலவரச் செயல்களில் போராட்டக்காரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

பாரிஸின் புறநகர்ப் பகுதியான ஹே லெஸ் ரோசஸின் மேயர் வின்சென்ட் ஜீன்ப்ரூனின் இல்லத்தை தீப்பற்றி எரியும் காரைக் கொண்டு மோதி கலவரக்காரர்கள் தாக்குதல் நடத்தியதிலிருந்து வன்முறையின் தீவிரத்தை உணர முடியும். அதில் மேயரின் மனைவியும் அவரது குழந்தையும் காயத்துடன் உயிர் தப்பினர்.

பொலிஸார் ஆயுதத்தைப் பயன்படுத்தும் சட்டப்பிரிவு அளித்துள்ள சுதந்திரமே இந்த சம்பவங்களுக்குக் காரணம் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. பிரான்ஸில் பயங்கரவாதச் செயல்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து, பொலிஸார் ஆயுதங்களைப் பயன்படுத்துவது தொடர்பான சட்டத்தில் 2017ஆம் ஆண்டு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதன்படி, பொலிஸாரின் உத்தரவை மீறி வாகனத்தை நிறுத்தாமல் சென்றாலோ, பொலிஸாருக்கு அச்சுறுத்தல் ஏற்படும்படி நடந்துகொண்டாலோ துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு சட்டம் அனுமதிக்கிறது.

நஹேலை துப்பாக்கியால் சுட்ட காவலர் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இருப்பினும், சட்டத்துக்குட்பட்டே நஹேல் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது என்கிற வாதத்தை அரசுத்தரப்பு முன்வைக்கிறது.

''நஹேல் உயிரிழப்பைப் பொறுத்தவரை, நான் ஒட்டுமொத்த பொலிஸாரையும் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை. அவர் அரபு முகச்சாயலைக் கொண்டவர் என்கிற ஒரே காரணத்தால்தான் சுட்டுக் கொல்லப்பட்டார். எனது மகனை சுட்டுக் கொன்ற காவலரை மட்டுமே குற்றஞ்சாட்டுகிறேன்'' என நஹேலின் தாயார் கூறியுள்ளார். அதே தாயார் வன்முறைகளுக்கு எதிராக பேசியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

மேற்கு ஆசியாவிலிருந்தும் வடக்கு ஆபிரிக்காவிலிருந்தும் ஏற்பட்டிருக்கும் குடியேற்றம் காரணமாக, பிரான்ஸில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. பிரான்ஸ் சனத்தொகை பரம்பலில் ஏற்பட்டிருக்கும் மாற்றம், பெரும்பான்மை கிறிஸ்தவர்களுக்கும், சிறுபான்மை முஸ்லிம்களுக்கும் இடையே பதற்றத்தை ஏற்படுத்துவதாக ஏற்கெனவே பல குற்றச்சாட்டுகள் நிலவுகின்றன.

பிரான்ஸில் வன்முறையில் ஈடுபட்டு வரும் பெரும்பாலானவர்கள் 20 வயதுக்குட்பட்ட இளைஞர்கள். வன்முறை தொடர்பாக இதுவரை 3,300க்கும் மேற்பட்டோரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இந்தக் கலவரத்துக்கு சமூக ஊடகங்களில் பரப்பப்படும் வதந்திகளும் முக்கியமான காரணம்.

பொலிஸாரின் வாகனம் ஒன்றை இளைஞர்கள் ஆயுதத்துடன் கடத்திச் செல்வது போன்றும், பல்லடுக்கு வாகன நிறுத்தத்திலிருந்து வாகனங்கள் கீழே விழுவதுபோலவும் இப்போது நடந்துவரும் கலவரத்தைத் தொடர்புபடுத்தி சமூக ஊடகங்களில் புகைப்படங்களும், காணொளிகளும் வெளியாகின. ஆனால், இவை பழைய திரைப்படத்தின் காட்சிகள் என்பது ஆய்வில் தெரியவந்தது.

இந்தக் காட்சிகள் பிற நகரங்களிலும் அரசுக்கு எதிரான வன்முறையைத் தூண்டின. இந்த வன்முறையில் பொலிஸ் நிலையங்கள், அரசுக்குச் சொந்தமான கட்டடங்கள் மட்டுமன்றி, பாடசாலைகள்கூட குறிவைக்கப்படுகின்றன எனும்போது, கலவரத்தின் நோக்கம் என்னவாக இருக்கும் என்பது குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழும்புகின்றன.

நஹேல் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை வன்முறைக்குப் பயன்படுத்தக் கூடாது என ஜனாதிபதி இம்மானுவல் மேக்ரான் கூறியுள்ளார். வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கு சமூக ஊடகங்கள் முக்கிய காரணமாக இருப்பதாகத் தெரிவித்த அவர், இந்தப் போராட்டத்தில் சிறார்கள் ஈடுபடுவதைத் தவிர்ப்பதற்காக பெற்றோர் தங்களது பிள்ளைகளை வீட்டிலேயே வைத்திருக்கும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார். வன்முறையை நிறுத்த வேண்டுமென நஹேலின் குடும்பத்தினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நஹேல் கொலையைத் தொடர்ந்து நடைபெற்று வரும் வன்முறை, அதற்காக மட்டுமே நடைபெறுகிறது என்று கூறிவிட முடியாது. அரசுக்கு எதிரான பொதுவான கோபம், ஏமாற்றத்தின் வெளிப்பாடுதான் இவ்வாறு வன்முறையாக வெளிப்படுகிறது. இரதை பிரான்ஸில் மட்டுமன்றி பல்வேறு நாடுகளிலும் நடந்துள்ள சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன. இதற்கு மதச்சாயம் பூசுவது தவறு என்று சமூக ஆர்வலர்கள் அறிவுறுத்துகின்றனர்.

உலகச் சூழலைக் கருத்தில்கொண்டு ஒவ்வொரு நாடும் தனது ஆயுதப் படைகளுக்கான அதிகாரத்தை அதிகரிக்கும் வகையில் சட்டத்திருத்தங்கள், நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இலங்கையில் கூட கோட்டாபய ராஜபக்ஷ மக்கள் புரட்சியால் விரட்டப்பட்டதையடுத்து பாதுகாப்புப் படையினருக்கான அதிகாரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஸ்திரப்படுத்தி வருகிறார். ஆனால், இந்த முயற்சிகளின் விளைவுகள் என்ன? ஆயுதங்களை கையில் வைத்திருப்பதானது மக்களை பாதுகாக்கவா அல்லது மக்களின் உயிர்களை பறிப்பதற்கா என்று கேள்வி எழுகின்றது.

இதற்கிடையே, பிரான்ஸின் அண்டை நாடான சுவிட்சர்லாந்தில் சிறுவன் சுடப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்கள் தொடங்கியுள்ளன. பிரெஞ்சு மொழி பேசுபவர்கள் அதிகம் வாழும் லாசன் நகரில், முக்கிய வீதிகளில் திரண்ட நூற்றுக்கும் மேற்பட்டோர், அங்கிருந்த கடைகளின் ஜன்னல்கள், கதவுகளை அடித்து நொறுக்கினர். இது குறித்து புகார் அளிக்கப்பட்டதை அடுத்து ஏழு பேர் கைதுசெய்யப்பட்டனர். இதே போல், மற்றொரு ஐரோப்பிய நாடான பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில், வன்முறையில் ஈடுபட முயன்ற, பத்துக்கும் மேற்பட்டோரை பொலிஸார் கைதுசெய்தனர்.

சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு மக்களை அடக்க நினைக்கும் அரசுகளும், பாதுகாப்புப் படையினரும் மேற்கொள்ளும் கெடுபிடிகளுக்கு முடிவு ஒருநாள் வந்தே தீரும். இலங்கைக்கு அந்த அனுபவம் வந்துபோனது. மேற்குலகிற்கு இப்போது கிடைக்க ஆரம்பித்துள்ளது. அவ்வளவுதான்.



# நேர்மையான முறையில் கடன் மறுசீரமைப்பை செய்வதற்கு பொறுப்புக்கூறல் அவசியம்

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டத்தை கடந்த சனிக்கிழமை பாராளுமன்றம் 60 பெரும்பான்மை வாக்குகளினால் அங்கீகரித்ததை அடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னொரு சாதனையை எட்டிப் பிடித்திருக்கிறார். செயற்றிட்டத்துக்கு ஆதரவாக 122 உறுப்பினர்களும் எதிராக 62 உறுப்பினர்களும் வாக்களித்த அதேவேளை, 40 உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. மீண்டும் பாராளுமன்றத்துக்கு தெரிவாகக்கூடிய வாய்ப்புகள் குறித்து சிந்திக்கவேண்டிய தேவை கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கெனவே பெரும் இடர்பாடுகளுக்கு உள்ளாகியிருக்கும் மக்கள் மீது மேலும் சுமைகளை ஏற்றக்கூடிய ஒரு செயற்றிட்டத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு தயக்கம் காட்டியிருப்பார்கள்.

ஆனால், ஜனாதிபதி தனது நிலைப்பாட்டிலும் நாட்டின் பொருளாதார எதிர்காலத்துக்கான தனது நோக்கிலும் உறுதியாக நின்றார். அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்களும் அவருடன் இணங்கிப் போயினர். அரசு என்ற கப்பலை அமைதியான கடலில் வழிப்படுத்திச் செல்வதில் இதுவரையில் ஜனாதிபதி வெற்றி கண்டுவந்திருக்கிறார். எதிர்ப்பவர்களை மௌனமாக்கி அவர்கள் செயற்பாடுகளை நுண்ணியமான ஒரு முறையில் தடுப்பதற்கு பயன்படுத்தப்படக்கூடிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம், ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம் மற்றும் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் சட்டமூலம் போன்ற சட்டங்களை கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார்.

இப்போது கப்பல் பாதுகாப்பான துறைமுகத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியில் இரண்டாவது தொகுதியும் கிடைக்கவிருக்கிறது. இந்நிலையில், பேரவா கொண்ட கப்பல் பணியாளர்களில் சிலர் ரணில் விக்கிரமசிங்க இல்லாமலேயே தங்களால் சமாளிக்கமுடியும் என நினைக்காமல் இருப்பதை உறுதிசெய்வதே அவருக்குள்ள சவாலாக இருக்கும். கடற்கொள்ளையர்கள் போன்று நடந்துகொள்ளக் கூடியவர்களின் கைகளில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டம், அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவன சட்டம் போன்ற ஒடுக்குமுறைச் சட்டங்கள் இருந்தால் அவை எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதை நினைத்துப் பார்க்க பயமாக இருக்கிறது.

இன்னொரு மாலுமியினாலும் அவரது பணியாளர்களினாலும் சூறாவளியொன்றின் நடுவில் கைவிடப்பட்ட அரசு என்ற கப்பலை பொறுப்பேற்றவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. 2001-2004, 2015-2019 காலப்பகுதிகளில் தன்னுடன் அதிகாரத்தை பகிர்ந்துகொண்டவர்களை சூழ்ச்சித்திறத்தால் விஞ்சிவிடமுடியும் என்று தனது திறமை குறித்து மிகையான மதிப்பிட்டை கொண்டிருந்தார். இந்த சந்தர்ப்பத்திலும் கூட அதே நிலைமை மீண்டும் வரக்கூடிய ஆபத்து இருக்கிறது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டம் மீதான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் நடைபெற்றபோது ஆளும் கட்சியின் உயர்மட்ட தலைவர்களில் சிலர் சபைக்கு சமுகமளிக்காமல் இருந்ததன் மூலம் எதிர்வரும் நாட்களில் நேரக்கூடியவற்றை முன்னுணர்த்தியிருப்பதாக தோன்றுகிறது.

கப்பல் பணியாளர்கள் கிளர்ச்சியில் இறங்கும் பட்சத்தில் மாலுமியை மாறுவதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய முயற்சிக்கு பயணிகள் ஆதரவளிக்காமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டுமானால் அவர்களை நன்றாக நடத்தவேண்டியது அவசியமாகும். உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு திட்டத்தின் சுமை மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. மக்களின் சேமிப்புகளை உண்மையில் அரைவாசியாக்கிய கடந்த வருடத்தைய 70 சதவீத பணவீக்கத்துக்குப் பிறகு இது நடந்திருக்கிறது. கடந்த மாதம் சுமார் 12 சதவீதத்தில் பணவீக்கம் இருந்தபோதிலும் முன்னதாக தொடர்ச்சியான பணவீக்கத்தினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். வங்கிகளுக்கு ஆதரவான அணுகுமுறையை கடைப்பிடிப்பதற்கு தீர்மானித்ததன் மூலமாக அரசாங்கம் அதன் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டத்தில் மக்களின் மீதமான அரைவாசி சேமிப்பை பாதுகாப்பதில் கவனம் எடுத்திருக்கிறது.

வங்கி முறைமையை அவ்வாறு பாதுகாத்ததன் மூலம் அரசாங்கம் புதிய செல்வத்தைப் பெருக்கும் கோர்ப்பரேட் துறையின் நலன்களையும் பாதுகாத்திருக்கிறது. தங்களது செல்வத்தின் ஒரு பகுதியின் இழப்பின் வேதனையை இலங்கை மக்கள் அனுபவிக்கவேண்டும் என்ற சர்வதேச கடன் வழங்குநர்களின் நியாயமற்ற வாதத்துக்கும் அரசாங்கம் இணங்கிக் கொண்டுள்ளது.

இலங்கையின் பிணைமுறிகளில் முதலீடு செய்தபோது தங்களுக்கு நேரக்கூடிய இடர்பாடுகளை சர்வதேச கடன் வழங்குநர்கள் அறிந்திருந்தார்கள். அவ்வாறிருந்தும் கூட அவர்கள் பாரிய இலாபத்தை அடையமுடியும் என்ற காரணத்தால் சுயமாக முதலீடு செய்தார்கள். ஆனால், மாறுபட்ட வகையில், கடன் மறுசீரமைப்பின் சுமையை பகிர்ந்துகொள்ளுமாறு மக்களிடம் கேட்கப்படுகிறது. மக்களுக்கு மாற்றுத் தெரிவுகள் இல்லாத அதேவேளை, இலங்கையை இன்றைய பரிதாபநிலைக்கு கொண்டுவந்தவர்கள் தற்போது முன்னடுக்கப்படும் மறசீரமைப்புகளின் மூலம் தொடர்ந்து பயனடைந்துகொண்டிருக்கிறார்கள்.

### முறையற்ற இலக்குகள்

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டத்தினால் பிரதானமாக பாதிக்கப்படுவது ஓய்வூதிய நிதியங்களே (ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம்) வாழ்நாள் பூராவும் வழங்கப்படும் ஓய்வூதியத்துக்கு மாற்றாக ஊழியர்கள் ஓய்வுபெறும்போது ஒரே தடவையில் வழங்கப்படும் கொடுப்பனவுகளாக இந்த இரு நிதியங்களையும் அரசாங்கம் நிறுவியது. சகலருக்கும் இலவச சுகாதார சேவை, இலவசக் கல்வி வசதி மற்றும் முன்னர் ஒரு காலத்தில் இலவச உணவுப் பொருட்களை வழங்குவதன் மூலமாக ஒரு நலன்புரி அரசாக (Welfare State) இலங்கை நீண்டகாலமாக பெருமைப்பட்டு வந்திருக்கின்ற போதிலும், தொழில்வாய்ப்பு இல்லாதவர்கள் அல்லது தொழிலைச் செய்யமுடியாத அளவுக்கு முதுமையடைந்தவர்கள் சகலருக்கும் அவர்கள் ஓரளவு கண்ணியமான முறையில் வாழக்கூடியதாக சமூக பாதுகாப்புத் திட்டம் எதையும் நடைமுறைப்படுத்தியதில்லை.

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகிய ஓய்வூதிய நிதியங்களுக்கு 30 சதவீத வரி இலக்கை வைப்பதற்கு எடுத்த தீர்மானத்தை அரசாங்கம் நியாயப்படுத்த முயற்சித்தாலும் கூட அது நியாயமானதே அல்ல. ஓய்வூதிய நிதியங்கள் மீது 14 சதவீத வரி விதிக்கப்படுகின்ற அதேவேளை வங்கிகளுக்கு 50 சதவீத வரி விதிக்கப்படுகிறது என்று அரசாங்கம் கூறியிருக்கிறது.

ஓய்வூதிய நிதியங்களுக்கு ஹொப்சனின் தெரிவே இருக்கிறது. தோமஸ் ஹொப்சன் (1544 - 1631) இங்கிலாந்தில் வாழ்ந்த ஒரு குதிரைகள் உரிமையாளர். குதிரை வாங்க வருபவர்களிடம் தொழுவத்தின் வாசலுக்கு மிகவும் அருகாக நிற்கும் குதிரையை வாங்கவேண்டும் அல்லது வேறு குதிரையை வாங்கமுடியாது என்று கூறுவாராம். ஓய்வூதிய நிதியங்கள் அவற்றின் வருமானங்கள் மீதான 30 சதவீத வரிவிதிப்பை (தற்போதைய வரி வீதத்தின் இரு மடங்கு) ஏற்றுக்கொள்ளவேண்டும் அல்லது அரசாங்க பிணை முறிகளில் உள்ள அவற்றின் முதலீடுகளுக்கு மிகவும் குறைந்தளவு வட்டிவீதங்களை பெற்றுக்கொள்வதற்கு இணங்கவேண்டும் என்று கேட்கப்படுகிறது.

உயர்ந்த வரிவீதத்தை செலுத்தவேண்டும் அல்லது குறைந்த வட்டிவீதங்களை பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற தெரிவை ஓய்வூதிய நிதியங்களுக்கு முன்வைப்பதில் உள்ள பிரச்சினை என்னவென்றால், தனிப்பட்ட உரித்துகளின் திரட்சிகளைக் கொண்டவையாக இருக்கும் ஓய்வூதிய நிதியங்களுக்கு தனிப்பட்ட முறையில் வரி விதிக்கப்படுவதாக இருந்தால் அவை குறைந்த மட்ட வரி வீதத்துக்கு மாத்திரமே உட்படும். இது உண்மையில் அவ்வாறு தான் இருக்கவேண்டும். ஏனென்றால் ஒப்பீட்டளவில் சிறியவையான இந்த ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய உரித்துக்கள் (அவற்றை வைத்திருப்பவர்களில் அதிகப் பெரும்பாலானவர்களிடம் ஒரு சில மில்லியன் ரூபாவே உள்ளது) அவற்றின் உறுப்பினர்களின் எஞ்சிய வாழ்நாள் பூராவுக்குமான ஒரேயொரு சேமிப்பாக இருக்கப்போகிறது. குடியியல் நலனில் அக்கறை கொண்ட வேறு பல நாடுகளைப் போன்று இலங்கை வாழ்நாள் சமூகப் பாதுகாப்பு திட்டம் எதையும் கொண்டிருக்கவில்லை. அரசாங்க ஊழியர்களைத் தவிர வேறு எவருக்கும் ஓய்வூதியத்தை வழங்குவதுமில்லை. இது தவிரவும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கான பங்களிப்புகள் (பணத்தொகைகள்) அனுப்பப்படுவதற்கு முன்னதாக வரி செலுத்தப்பட்ட பிறகே செய்யப்படுகின்றன. இதனால் அதன் பங்களிப்பாளர்கள் இரு தடவைகள் வரி விதிப்புக்கு ஆளாகிறார்கள்.

அரசாங்கத்தின் கடன் கடப்பாடுகளை குறைப்பதற்கான வழிமுறையாக ஊழியர் சேமலாப நிதியத்தையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தையும் பயன்படுத்துவதில் உள்ள ஓரவஞ்சனை, காரியங்களை அரசாங்கம் செய்யாமல் விடுவதால் மேலும் மோசமாக்கப்படுகிறது. முதலாவதாக, தவறாக நடந்துகொள்கிற கோர்ப்பரேட் நிறுவனங்களுக்கும் அரசியல் தொடர்புடைய தனிநபர்களுக்கும் வங்கிகளினால் குறிப்பாக அரச வங்கிகளினால் வழங்கப்பட்ட பெருமளவு கடன்களை மீட்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இரண்டாவதாக, களவாடப்பட்ட சொத்துகளை மீட்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதுவே ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை எதிர்பாராத வகையில் அதிகாரத்துக்கு கொண்டுவந்த கடந்த வருடத்தைய போராட்ட இயங்கத்தின் முக்கியமான கோரிக்கையாக இருந்தது.

### பொறுப்புக்கூறல் இல்லை

முக்கிய எதிரணித் தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டத்தின் அநீதியை சுருக்கமாக விபரித்திருக்கிறார். ''எமது பொருளாதாரத்தின் இடர்மிகுந்த நிலையைப் பயன்படுத்தி கொள்ளை இலாபம் சம்பாதிப்பதை நோக்கமாகக் கொண்ட முதலீட்டாளர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள். சாத்தியமானளவு குறுகிய காலத்தில் நினைத்துப்பார்க்க முடியாத இலாபத்தை அடைவதே அவர்களின் நோக்கம். இந்த தனவந்த முதலீட்டாளர்களினால் செலுத்தப்படவேண்டிய கட்டண வீதங்களில் கைவைக்கப்படவில்லை என்கிற அதேவேளை, ஊழியர் சேமலாப நிதியத்தின் பயனாளிகளான உழைக்கும் மக்களுக்குக் கிடைக்கவேண்டிய வட்டி அந்த நிதியத்தினால் செலுத்தப்படவேண்டிய வருமானவரி வீதத்தினால் குறைக்கப்பட்டிருக்கிறது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயன்முறையில் பங்குபற்றுவதற்கு ஊழியர் சேமலாப நிதியம் மறுத்தால் வருமான வரி 14 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாக அதிகரிக்கப்படும்.

செய்திப் பத்திரிகைகளும் இந்த விடயம் குறித்து ஆசிரிய தலையங்கங்களில் கருத்துகளை வெளியிட்டிருக்கின்றன. "சாதகமான விளை பயன்களைக் காணவேண்டுமாக இருந்தால் இந்த பொருளாதார சீர்திருத்தங்களை பல வருடங்களுக்கு நீடிக்கவேண்டியதாக இருக்கும். இது உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் ஒரு கட்டமாக மாத்திரமே இருக்கமுடியும். உள்ளூர் வங்கிகளிடம் இருந்து கோடிக்கணக்கில் கடன்பெற்றுவிட்டு அதை திருப்பிச் செலுத்தாமல் வங்கிகளை ஏமாற்றிக்கொண்டு திரியும் உள்ளூர் பெருமுதலாளிகள் ஏன் விட்டுவைக்கப்பட்டிருக்கிறார்கள்? அவர்களின் அரசியல் தொடர்புகள்தான் அதற்கு காரணமா என்பதே ஒவ்வொரு குடிமகனின் கேள்வியாகவும் இருக்கிறது. நாட்டின் பொருளாதார அவலத்துக்குப் பொறுப்பானவர்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்'' என்று 'சண்டே டைம்ஸ்' எழுதியிருக்கிறது.

''சட்டத்தின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியத்தின் அதிகப் பெரும்பான்மையான நிதியை அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யவேண்டும். அரசாங்க பிணையங்கள் கடந்த வியாழக்கிழமை வரை மிகவும் நம்பகமான முதலீடுகளாக கருதப்பட்டன. பங்குப் பரிவர்த்தனையில் ஊழியர் சேமலாப நிதியத்தை முதலீடு செய்த முறைகேடான நடவடிக்கைகள் பற்றி நாடு நன்கு அறியும். அந்த முறைகேடான நடவடிக்கைகளுக்காக எவரும் பொறுப்புக்கூற வைக்கப்படவில்லை. ஆனால், வங்குரோத்து நிலையடைந்த நாட்டை மீட்டெடுப்பதற்கு முன்னெடுக்கப்படும் செயன்முறைகளின் வேதனையை பகிர்ந்துகொள்ளுமாறு இலட்சக்கணக்கான வரியிறுப்பாளர்கள் மீண்டும் ஒரு தடவை கேட்கப்படுகிறார்கள்'' என்று 'த ஐலண்ட்' பத்திரிகை அதன் ஆசிரிய தலையகத்தில் கூறியிருக்கிறது. அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டத்திலும் அதன் ஒட்டுமொத்தமான நெறிப்படுத்தலிலும் குறிப்பாகக் காணமுடியாமல் இருக்கும் அம்சம் பொறுப்புக்கூறல் கடப்பாடேயாகும்.

போர் இராணுவ ரீதியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பிறகு இலங்கை சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கு குறிப்பாக ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது. அங்கு கூட இலங்கையிடம் காணமுடியாமல் இருப்பது பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலையேயாகும். உண்மை, பொறுப்புக்கூறல், இழப்பீடு மற்றும் நிறுவனரீதியான சீர்திருத்தம் என்பவற்றை உள்ளடக்கிய நிலைமாறுகால நீதிச் செயன்முறை என்பது உரிமை மீறல்கள் மீணடும் நிகழாதிருப்பதை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்டவையாகும். பொருளாதாரக் குற்றங்களைப் பொறுத்தவரையிலும் கூட அதுவே உண்மை.

தேசிய பாதுகாப்பையும் தேசிய பொருளாதாரத்தையும் பேணிப்பாதுகாப்பதில் பொறுப்புணர்வை வெளிக்காட்டாதவர்களின் பொருளாதாரக் குற்றங்கள் 2018ஆம் ஆண்டில் மேல் நடுத்தர வருமான அந்தஸ்தை அடைந்த நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்தன. முறைகேடான ஆட்சிமுறை, ஊழல் மற்றும் பொருளாதார வீழ்ச்சி ஆகியவை மீண்டும் நிகழாமல் இருக்கக்கூடியதாக பயணிகளுக்கு பொறுப்புக்கூறும் கடப்பாட்டைக் கொண்ட புதிய மாலுமியும் பணியாளர்களும் அரசு என்ற கப்பலுக்கு தேவைப்படுகிறார்கள்.



கலாநிதி
ஜெகான் பெரேரா

## நக்கல் நமசிவாயம்

*மனிதாபிமான நாடு எண்டு இலங்கைக்கு ஆதரவா ஐ.நா. மனித உரிமை பேரவையில செயற்படும் தாய்லாந்து, முத்துராஜா யானை சம்பவத்திற்குப் பிறகும் அதே நிலைப்பாட்டில்தான் இருக்குமோ..?*



## இன்றைய நாளில்...

* 1687 – சேர் ஐசக் நியூட்டன் தனது புகழ்பெற்ற 'பிரின்சிப்பியா மெத்தமாட்டிக்கா' என்ற நூலை வெளியிட்டார்.
* 1954 – பிபிசி தனது முதல் தொலைக்காட்சிச் செய்தியை ஒளிபரப்பியது.
* 1975 – விம்பிள்டன் கிண்ணத்தை வென்ற முதலாவது கறுப்பினத்தவர் என்ற பெருமையை ஆர்தர் ஆஷ் பெற்றார்.
* 1977 – பாகிஸ்தானில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோ பதவியிழந்தார்.
* 1987 – ஈழப் போர்: விடுதலைப்புலிகளின் முதல் கரும்புலித் தாக்குதல், மில்லரினால் யாழ்ப்பாணம், நெல்லியடி இராணுவ முகாம் மீது நடத்தப்பட்டது.
* 1992 – இயக்கச்சியில் வை-8 விமானம் விடுதலைப்புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டது.
* 1996 – குளோனிங் முறையில் முதலாவது பாலூட்டியான 'டோலி' என்ற ஆடு ஸ்கொட்லாந்தில் பிறந்தது.
* 1997 – பாராளுமன்ற உறுப்பினர் அருணாசலம் தங்கத்துரை, திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.
* 1998 – செவ்வாய்க் கிரகத்துக்கு தனது முதலாவது விண்கலத்தை ஜப்பான் ஏவியது.

### வாக்களித்த தொழிலாளர்களா? பதவி கொடுத்த அரசாங்கமா?

# கண்ணை மூடிக்கொண்டு வாக்களிக்கும் மலையகப் பிரதிநிதிகளே அரசில் உள்ளனர்

## பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவிப்பு



"வாக்களித்த தொழிலாளர்களா?, பதவி கொடுத்த அரசாங்கமா?" என்றால், "அரசாங்கம் தான்!" என கண்ணை மூடிக்கொண்டு வாக்களிக்கும் மலையகப் பிரதிநிதிகளே இன்றைய அரசாங்கத்தில் உள்ளனர் என கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த வாரம் பாராளுமன்றத்தில் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அதன் மூலம் உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கான முழு அதிகாரமும் நிதியமைச்சருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின் முழுச்சுமையும் தொழிலாளர் மீது சுமத்தப்படப்போகின்றது என்பது வெளிப்படையாகவே முன்வைக்கப்பட்டது. எனினும், வாக்களித்த தொழிலாளர்களா?, பதவி கொடுத்த அரசாங்கமா? என்றால் அரசாங்கம் தான் என கண்ணை மூடிக்கொண்டு வாக்களிக்கும் மலையகப் பிரதிநிதிகளே இன்றைய அரசாங்கத்தில் உள்ளனர்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில் தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் பயன்படுத்தப்படவுள்ளது. இந்நிதியங்களில் நாட்டிலுள்ள 25 இலட்சம் வரையிலான தொழிலாளர்களின் சேமிப்பே உள்ளது. ஒருவர் உழைக்கும்போது தனது ஓய்வு காலத்துக்காக தன்னுடைய உழைப்பில் இருந்து சேமிக்கும் நிதியே இது. அதனை வெட்டிக் குறைப்பதென்பதோ அல்லது அதற்கான வருவாய்களைக் குறைப்பதென்பதோ தொழிலாளர்களின் உழைப்பைச் சூறையாடுவதாகும். அதனையே அரசாங்கம் செய்யப்போகிறது. இந்த 25 இலட்சம் தொழிலாளர்களின் நிலை, மரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகவே உள்ளது. அதிலும், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நிலைமை, மரத்தில் இருந்து விழுந்தவனை யானை மிதிக்கும் நிலையாக, மிகவும் பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு உழைப்புக்கேற்ற கூலி வழங்கப்படுவதில்லை என்பது நாடறிந்த உண்மை. அதிலும், அக்கூலியிலிருந்து குறைத்து சேமிக்கப்படும் சேமலாப நிதியத்தையும் அரசாங்கம் தனது தேவைக்காக எடுத்துக்கொள்வது மிகப்பெரிய அடாவடித்தனமும் அநியாயமுமாகும்.

பெருந்தோட்டத் தொழிலார்களிடமிருந்து மாதா மாதம் சந்தாவைப் பெற்றுக்கொள்கின்றனர். அதில் இலட்சக்கணக்கான வருமானம் பெறுகின்றனர். மறுபக்கம், அவர்களின் வாக்குகளைப் பெற்று பதவிகளையும் பெற்றுக்கொள்ளத் தவறுவதில்லை. ஆனால், தொழிலாளரின் உரிமை பறிக்கப்படும்போது அவர்களுக்கு அநியாயம் நடக்கும்போது, அதையெல்லாம் செய்பவர்களோடு சேர்ந்து, பதவிக்கும், வசதிக்கும், சலுகைக்குமாக அரசாங்கத்துக்கு முழு ஒத்துழைப்பையும் அரசாங்கத்தில் உள்ள மலையகப் பிரதிநிதிகள் வழங்கி வருகின்றனர். இப்போதாவது முதலாளிகளோடு யார் உள்ளார்கள், தொழிலாளர்களோடு யார் உள்ளார்கள் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இல்லையென்றால் மீதியுள்ள கொஞ்சமும் கைவிட்டுப் போய்விடும் என்றார்.

# பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் எண்ணெய்க்காப்பு







யாழ். பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேகத்துக்கான எண்ணெய்க்காப்பு சாத்தும் முதல்நாள் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

யாழ்.பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் 07 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து நாளை வியாழக்கிழமை மாலை 3.00 மணி வரை இடம்பெறும். 07 ஆம் திகதி காலை 8.45 மணி முதல் 10.15 மணி வரை கும்பாபிஷேகம் இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகும்.

# வடக்கு, கிழக்கில் விகாரைகளுக்கு மேல் இந்துக்கோயில்கள் அமைக்கப்பட்டனவா?

## மேதானந்த தேரரின் கருத்துக்கு வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் கண்டனம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விகாரைகளுக்கு மேல் இந்துக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளதாகவும் கந்தரோடையில் ஐம்பதுக்கும் அதிகமான விகாரைகள் இருந்ததாகவும் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார். இதனை இந்து அமைப்புகள் வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கைத்தீவில் தமிழ் மன்னர்கள் காலத்திலேயே பௌத்தம் முதலில் கொண்டுவரப்பட்டது என்ற பல உண்மைகளை வரலாற்றுத் தொன்மைகள், ஓலைச் சுவடிகள், பிராமிக் கல்வெட்டுகள் ஆதாரப்படுத்துகின்ற போதும் அதனை மறைத்து தமிழ் பௌத்த ஆதாரங்களை சிங்கள பௌத்தமாக மாற்றிவிட வேண்டும் என்ற நோக்கில் இனங்களுக்கிடையே இனவாத தீயை பற்ற வைக்கிறார் எல்லாவெல மேதானந்த தேரர்.

முத்துசிவன் அநுராதபுரத்தை அறுபது ஆண்டுகள் ஆட்சி செய்த பின்னர் முத்துசிவனின் மகன் தீசன் அநுராதபுரத்தை ஆட்சி புரியும் போது தான் பௌத்தம் தீசனின் அனுமதியுடன் இலங்கையில் பரப்பப்பட்டது. இதனை மகாவம்சம் கூட பதிவுசெய்துள்ளது.

தீசன் பின்னர் தேவநம்பியதீசன் என அழைக்கப்பட்டான். அவனால் முதலாவது விகாரை 'தூபராமதூபி' என்ற பெயரில் புத்தரின் புனிதப் பொருட்கள் வைத்துக் கட்டப்பட்டது. இந்தத் தூபராமதூபி முன்னர் சிங்களத்தில்'மாகேஜ' கோயில் என அழைக்கப்படும் சைவர்களால் மகேசன் அல்லது மகேஸ்வரன் அல்லது சிவன் எனக் குறிப்பிடப்படும் சிவன் கோயில் இருந்த இடத்திலேயே அமைக்கப்பட்டதாக வரலாற்று ஆய்வாளர்களும் ஆதாரங்களும் கூறுகின்றன.

கந்தரோடையில் ஐம்பதுக்கும் அதிகமான விகாரைகள் இருந்ததாக மிக மோசமான பொய்யை தேரர் சித்திரித்துள்ளார். உண்மையாக கந்தரோடையில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள். அவர்களின் சமாதிகளே அரை உருண்டை வடிவில் அருகருகே அமைக்கப்பட்டிருந்தன. அவை வழிபாட்டுக்குரிய விகாரைகள் அல்ல.

தேவநம்பியதீசன் காலத்தில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமிழ் நாக மன்னர்கள் பிரதேச ரீதியாக ஆட்சிபுரியும்போது அவர்களும் தமிழ் பௌத்தம் பரவ ஒத்துழைப்பு வழங்கியதன் ஆதாரமே பௌத்த தொன்மைகளாகக் காணப்படுகின்றன.

அவை சிங்கள பௌத்தம் அல்ல. இலங்கை மிகத் தொன்மை வாய்ந்த சிவபூமி என்பதற்கு 4000 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட திருமூலரின் திருமந்திரத்தில் ஆதாரம் உண்டு.

அது மட்டுமல்ல, குருந்தவூர் என்ற குருந்தமரம் தொடர்பாக மாணிக்கவாசகரின் திருவாசகம் சிறப்பாகக் கூறுகின்றது. அத்துடன், பஞ்ச ஈச்சரங்கள் அவற்றுள் பாடல் பெற்ற வடகிழக்கின் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் சிறந்த சான்றாதாரங்களாக அமைகின்றன.

ஆகவே, மேதானந்த தேரர் அப்பட்டமான பொய்யை கட்டவிழ்த்து இனவாதத்தைத் தூண்டி நாட்டை மேலும் படுகுழியில் தள்ள முயற்சிக்கிறார்.

அப்படியென்றால் இந்தியாவில் புத்தகாயாவை சிங்கள பௌத்தமாக தேரரால் அறிவிக்க முடியுமா? எனவும் அவ்வறிக்கையில் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.

# பேராதனைப் பல்கலைக்கழகத்தை பார்வையிட்ட 2 இலட்சம் மக்கள்





கண்டி நிருபர்

பேராதனைப் பல்கலைக்கழகம் பொது மக்களின் பார்வைக்காக கடந்த முதலாம் திகதி திறந்துவைக்கப்பட்டபோது சுமார் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் அதனைப் பார்வையிட்டதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவிக்கிறது.

பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு 80ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது. சாதாரண காலங்களில் பொதுமக்களுக்கு அதில் பிரவேசிப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் இருந்தன.

இலங்கையில் உள்ள அதி சிறந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்றான இப்பல்கலைக்கழகம் 9 பீடங்களைக் கொண்டுள்ளதுடன் ஆயிரக்கணக்கான ஹெக்டேயர் நிலப்பரப்பில் தனி வளாகத்துடன் இயங்குகிறது. அதிசிறந்த வாசிகசாலை உட்பட பல நவீன ஆய்வுகூடங்களையும் கொண்டுள்ளது. இங்கு ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கி கல்வி பயின்று வருவது குறிப்பிடத்தக்கது.

# கடலட்டைப் பண்ணையால் யாழ்ப்பாண மீனவர்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

## முன்னாள் ஜனாதிபதி மைத்ரி யாழில் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணை பாரம்பரிய மீனவர்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் அலுவலகத்தில கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாரம்பரியமாக கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்களின் தொழில் முறைகளுக்கும் வாழ்க்கை முறைகளுக்கும் இடையூறு விளைவிக்கக்கூடிய வகையில் கடலட்டைப் பண்ணைகள் அமைந்துள்ளன.

அரசாங்கம் என்ற வகையில் மீனவ சமூகங்களுக்கு பாதிப்பில்லாமல் அவர்களின் கருத்துகளையும் உள்ளடக்கியதாக புதிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

கடல் மேளாண்மை என்ற பெயரில் வடக்குக் கடற்பரப்பில் அதுவும், யாழ்குடாக் கடலை அண்டிய பகுதியில் அதிகமாக கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

வடக்கில் மேற்கொள்ளப்படும் கடலட்டைப் பண்ணையால் பாரம்பரிய தொழில் முறைகளில் மீன் பிடித்தலை மேற்கொள்ளும் சமூகம் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது என்பது கண்கூடு.

பாரம்பரியமாக கடலை நம்பி மீன்பிடித்தலை மேற்கொள்ளும் சமூகங்களின் விருப்பமின்றி அரசாங்கம் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பது மிகத் தவறான செயலாகும்





ஆகவே, பாரம்பரிய கடற்றொழில் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் அமைக்கப்பட்ட கடலட்டைப் பண்ணைகள் அவர்களின் உரிமைகளையே பறிப்பதாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கேகாலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சமீரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ரூ. 10 கோடி திரவத் தங்கத்துடன் இளம் பெண்ணொருவர் கைது

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் சம்பவம்



இளம் பெண்ணொருவர் தனது அந்தரங்கப் பகுதியில் பத்துக் கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய திரவத் தங்கம் அடங்கிய 04 பொதிகளை மறைத்துவைத்து கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முயன்ற போது கைதுசெய்யப்பட்டுள்ளார்.இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை (04) காலை இடம்பெற்றுள்ளது.

விமான நிலையத்தில் அழகுசாதனப் பொருட்கள் விற்பனை நிலையமொன்றில் கடமையாற்றும் 24 வயதான பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து 05 கிலோ கிராமுக்கும் அதிகமான திரவத் தங்கம் அடங்கிய 04 பொதிகளை தனது அந்தரங்கப் பகுதியில் மறைத்து வைத்துக்கொண்டு காலை 8.45 மணியளவில் வெளியேற முயன்றபோதே இக்கைது இடம்பெற்றுள்ளது.

கைப்பற்றப்பட்ட தங்கம் அடங்கிய பொதிகளுடன் குறித்த பெண் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# மன்னார் வளைகுடாவில் சூறாவளி விசைப்படகுகள் கடலுக்குச் செல்லத் தடை



மன்னார் வளைகுடா கடல் பகுதியில் நிலைகொண்டுள்ள சூறாவளி காரணமாக விசைப்படகுகள் கடலுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் நிலைகொண்டுள்ள சூறாவளி காரணமாக தமிழ் நாடு இராமநாதபுரம் மாவட்ட தெற்கு கடல் பகுதியான பாம்பன், மண்டபம், கீழக்கரை, ஏர்வாடி, வாலிநோக்கம் உள்ளிட்ட மீன்பிடி துறைமுகங்களில் இருந்து மீன்பிடிக்கச் செல்லும் விசைப்படகு மீனவர்களுக்கு தமிழக அரசு வழங்கும் மீன்பிடி அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இதனால் சுமார் 600க்கும் மேற்பட்ட மீன்பிடி விசைப் படகுகள் கடற்கரையில் நங்கூரமிட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் மீன்வளத்துறை அதிகாரிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மறு அறிவித்தல் வரும் வரை மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மீன்பிடி தடையால் சுமார் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் நேரடியாகவும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீன்பிடி சார்பு தொழிலாளர்கள் மறைமுகமாகவும் வேலை இழந்துள்ளனர்.







ரபிதா அன்-நளீமியின் முன்னாள் மாணவர்கள் ஒன்றுகூடல் நிகழ்வு ஜாமிஆ நளீமிய்யாவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் தலைவர் யாகூத் நளீம், கலாபீடத்தின் அதிபர் அஷெய்க் அகார் முஹம்மட், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(படங்கள்:பேருவளை நிருபர்)

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.07.03
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5164
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,252,817.00
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 0 2 8 4 7 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3406
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,438,970.40
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 14 27 28 45

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1619
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.13,187,205.12
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 7 2 4 5 0 0

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1194
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,746,820.00
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 16 23 58 78

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 473
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,571,709.20
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 05 37 51 62
விசேட இலக்கினம் துலாம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1512
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 333,972,958.00
ஆங்கில எழுத்து Q
சுப்பர் இலக்கம் 12
வெற்றி இலக்கங்கள் 01 28 60 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான 4ஆம் கட்ட கவனயீர்ப்புப் போராட்டம் நிறைவு



## பொலிஸார்- போராட்டக்காரர்கள் கடும் வாக்குவாதம்

*யாழ். நிருபர்*

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கில் தையிட்டி பிரதேசத்தில் தனியார் காணியை ஆக்கிரமித்து இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்றுமாறு கோரியும் அதனைச் சுற்றியுள்ள தனியார் காணிகளை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென வலியுறுத்தியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (02) மாலை 03 மணியளவில் நான்காம் கட்டமாக ஆரம்பமான தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் (03) மாலை-05.45 மணியுடன் நிறைவடைந்துள்ளது.

முழுநோன்மதி போயா தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் மேற்படி விகாரையில் விசேட வழிபாடுகள் இடம்பெற்ற நிலையிலேயே நேற்று முன்தினம் (03) இரண்டாவது நாளாகவும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல தடவைகள் விகாரைக்கு முன்பாக அமைந்துள்ள காணியைப் போராட்டம் நடத்துவதற்கு வழங்கிய காணியின் உரிமையாளர் பலாலி பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு பலாலி பொலிஸாரால் கடுமையாக அச்சுறுத்தப்பட்டிருந்த காரணத்தால் விகாரை அமைந்துள்ள வீதியின் முகப்புக்கு வெளியே தனியார் காணியில் நேற்று முன்தினம் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இரண்டாவது நாளாக திங்கட்கிழமை காலை முதல் போராட்டம் தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட நிலையில், விகாரைக்குச் செல்லும் அதே வீதியின் வலது பக்கத்தால் குறித்த விகாரைக்கு இராணுவ வாகனங்கள் செல்வதை அவதானித்த போராட்டக்காரர்களில் ஒருபகுதியினர் நேற்றுக் காலை-10.30 மணியளவில் திடீரென அங்கிருந்து பேரணியாகச் சென்று வீதியோரமாகப் புதிதாக போராட்டக் களத்தை ஆரம்பித்து தொடர் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டக் களத்துக்கு விரைந்து சென்ற பலாலி பொலிஸார் போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட நிலையில், போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது. இதனையடுத்து பொலிஸ் அராஜகம் ஒழிக! எனப் போராட்டக்காரர்கள் உரத்துக் குரலெழுப்பியதையடுத்து பொலிஸார் போராட்டக்காரர்களுடன் முரண்படுவதைக் கைவிட்டு அங்கிருந்து அகன்றனர். இதனையடுத்து இரண்டு பகுதிகளிலும் தொடர்ந்தும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# மன்னாரில் தீக்கிரையான வீட்டை மீள புனரமைப்பதற்கான உதவி வழங்கிவைப்பு





*மன்னார் நகர் நிருபர்*

கடந்த வாரம் மன்னார் தோட்டவெளிப் பகுதியில் குடிசைவீடொன்றில் தீப்பரவல் ஏற்பட்டதன் காரணமாக முழு வீடும் எரிந்து நாசமாகியிருந்தது.

மிகவும் வறுமைப்பட்ட நிலையில் குறித்த குடும்பம் வாழ்ந்து வந்ததுடன், 7ஆம் தரம் மற்றும் 9ஆம் தரத்தில் கற்கும் இரு பிள்ளைகள் உட்பட அக்குடும்பத்தினர் மிகுந்த சிரமத்தின் மத்தியில் எரிந்த வீட்டைக்கூட திருத்தியமைக்க முடியாத நிலையில் பலரிடமும் உதவி கோரியிருந்தனர்.

இந்நிலையில், குறித்த கோரிக்கையை ஏற்று மன்னார் தமிழரசுக் கட்சியின் கிளைத் தலைவரும் சட்டத்தரணியுமான டினேஸனின் நிதியொதுக்கீட்டில் குறித்த குடும்பத்தின் வீட்டின் கூரையை அமைப்பதற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் தமிழரசுக் கட்சியின் கிளை உறுப்பினர்கள் இணைந்து மேற்கூரையை அமைப்பதற்கான பொருட்களை அக் குடும்பத்தினருக்கு வழங்கினர்.

அதேநேரம், குறித்த குடும்பத்தினர் இப்பொருளாதார நெருக்கடி காரணமாக மிகவும் வறுமையில் வாடுவதால் அக்குடும்பத்தினருக்கு உதவ முடிந்தவர்கள் மேலதிக உதவிகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# யாழில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு



*யாழ். நிருபர்*

யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 491 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வடமாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் கடந்த ஆறு மாதங்களில் ஆயிரத்து 843 பேர் டெங்கு நோயாளிகளாக இனங்காணப்பட்டுள்ளார்கள்.

யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 491 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 65 பேரும் மன்னார் மாவட்டத்தில் 77 பேரும் வவுனியா மாவட்டத்தில் 106 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 104 பேருமாக ஆயிரத்து 843 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர்.

வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகளவில் டெங்கு நோயாளர்கள் இனங்காணப் பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில், யாழ்ப்பாண நகரப் பகுதி, நல்லூர், கரவெட்டி ஆகிய பகுதிகளில் டெங்கு தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது.

எனவே, டெங்கு தொற்றைத் தவிர்ப்பதற்கு பொதுமக்கள் தமது சுற்றாடலை சுத்தமாக வைத்திருந்து பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் – என்றார்.

**ஆளணி பற்றாக்குறை**

இதேவேளை, வடமாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் மொத்தமாக 8,000 பேர் அனுமதிக்கப்பட்ட ஆளணியாக இருந்தாலும் சுமார் 2,000 பேருக்கானஆளணி பற்றாக்குறை காணப்படுகின்றது.

வடமாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆளணி பற்றாக் குறை காணப்படுகின்றது. அதில் குறிப்பாக, ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சுகாதார உதவியாளர்களாகக் காணப்படுகின்றார்கள். அதேபோல், தாதியர்கள், மருத்துவ மாதுகள் என பல்வேறுபட்ட நிலைகளிலும் ஆளணி பற்றாக் குறை காணப்படுகின்றது.

தற்போதுள்ள நிலையில் புதிதாக உள்வாங் குவதில் தாமதம் காணப்படுகின்றபடியால் எதிர்வரும் காலங்களில் சுகாதார அமைச்சின் ஊடாக இந்த நியமனங்கள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கின்றோம் – என வைத்தியர் த.சத்தியமூர்த்தி மேலும் தெரிவித்தார்.

# மலையக மக்களை பொருளாதார ரீதியாக வலுவிழக்கச் செய்ய முயற்சி

## டயகமவில் புதிய மதுபானசாலைக்கு இராதா எம்.பி. கடும் எதிர்ப்பு

*நுவரெலியா செய்தியாளர்*

மலையகப் பகுதிகளில் புதிய மதுபான சாலைகளைத் திறந்து தொடர்ந்தும் இந்த மக்களை மயக்கத்தில் வைத்திருப்பதே அரசாங்கத்தின தும் அதற்குத் துணைபோகின்ற அரசியல் வாதிகளினதும் திட்டமாக இருக்கின்றது. இந்த மக்களை பொருளாதார ரீதியாக வலுவிலக்கச் செய்வதன் மூலமாக அவர்களின் எதிர்கால சந்ததியை தொடர்ந்தும் அடிமைத்தனமாக வைத்திருக்கவே அவர்கள் முயற்சிக்கிறார்கள் என நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நுவரெலியா, டயகம பகுதியில் அமைக்கப்பட வுள்ள புதிய மதுபானசாலைக்கு நாம் முழுமை யான எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். இதனைத் தடுத்து நிறுத்த மாவட்ட செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது.

இன்று நாட்டில் இருக்கின்ற பொருளாதாரப் பின்னடைவு காரணமாக பாரிய பாதிப்பை சந்திக்கின்றவர்கள் மலையக மக்களே. இவ்வாறான ஒரு நிலையில், புதிய மதுபான சாலைகளை அமைப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருப்பதானது இந்த மக்களை அழிப்பதற்கான ஒரு திட்டமாகவே பார்க்கவேண்டியுள்ளது.

டயகம நகரில் ஏற்கனவே இரண்டு மதுபானசாலைகள் இருக்கின்றன. அங்கு ஓர் அரச கூட்டத்தாபன மருந்தாக்கல் கிளையை ஆரம்பிக்குமாறு நாம் பலமுறை கோரிக்கை வைத்திருந்தோம். அதனைக் கண்டுகொள்ளாத அரசாங்கம் இன்று புதிய மதுபானசாலைகளைத் திறப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதனைப் பார்த்துக்கொண்டு அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்படுகின்றவர்கள் தங்களுடைய இலாபத்தையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றனர்.இதனை இந்த மக்கள் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த மாவட்டத்தில் எங்குமே அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஒரு கிளை கிடையாது.குறைவான விலையில் மருந்துப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழியில்லை.ஆனால், அரசாங்கம் புதிய மதுபானசாலைகளைத் திறப்பதற்கு அனுமதி அளிக்கின்றது.

எதனைச் செய்யவேண்டுமோ அதனை விட்டுவிட்டு எதனைச் செய்யக்கூடாதோ அதனை மும்முரமாக செய்துகொண்டிருக்கின்றது இந்த அரசாங்கம். விலைவாசி அதிகரிப்பால் அன்றாடம் உணவிற்கே இந்த மக்கள் கஷ்டப்படுகின்றார்கள்.அவர்களுக்கு மேலும் மதுபானத்தைக் கொடுக்க அரசும் அரசுடன் இணைந்திருக்கின்றவர்களும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள்.

மலையகத்தின் சாபக்கேடே இந்த மதுபானசாலைகள் தான். அதற்குக் காரணம் மலையக அரசியல்வாதிகளே. என்னுடைய 30 வருடத்திற்கு மேற்பட்ட அரசியல் வாழ்வில் இதுவரையில் மதுபானசாலைகளுக்கான உரிமத்தையோ அதனை ஊக்குவிப்பதற்கோ கடுகளவேனும் நான் செயற்பட்டது கிடையாது. எனவே, மலையகத்திற்கு இப்பொழுது தேவை மதுபானசாலகள் அல்ல, அவர்களின் வாழ்வாதாரத்திற்கான புதிய திட்டங்களே. ஏன் மலையகத்தில் மாத்திரம் புதிய மதுபானசாலை களைத் திறப்பதற்கு அனைவரும் ஆர்வத்துடன் இருக்கின்றார்கள் என்ற கேள்வி எமக்கு எழுகின்றது. திட்டமிட்ட அடிப்படையில் எங்களை சீரழிக்கின்றார்கள் என்பது மாத்திரம் உண்மை - எனத் தெரிவித்துள்ளார்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

## தேரர் மீது தாக்குதல்

பசறை மொனரும்கல விகாரையின் தேரர் ஒருவரை பசறை நகரில் வைத்து பெண் ஒருவர் தாக்கியதாக குறித்த தேரரினால் பசறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தேரர் விகாரையில் இருந்து தனிப்பட்ட தேவைக்காக இலங்கை வங்கியின் ஏ.டி.எம். இயந்திரத்தில் பணம் வைப்பிலிடச் சென்றபோது பசறை டெமேரியா கம்மான பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் தன்னைத் தாக்கியதாக பசறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துவிட்டு பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாக்குதலுக்கான காரணம், பூஜைப் பொருட்களினால் ஏற்பட்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். தாக்கியதாகக் கூறப்படும் பெண்ணைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், குறித்த தேரர் நேற்று இரவு 9 மணியளவில் வைத்தியசாலையில் இருந்து தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் வைத்தியசாலையிலிருந்து விடுப்பு பெற்றுக்கொண்டு வெளியேறி அதன்பின் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று தான் கொடுத்த முறைப்பாட்டைத் திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





வட்டவளையில் பெய்த அடைமழை காரணமாக ரொசெல்ல பகுதியிலுள்ள வீடொன்றின்மீது மண்மேடு சரிந்து சேதம் ஏற்பட்டுள்ளது.

**படப்பிடிப்பு:** *மனுர சுதத் செல்லஹேவா*

# பெருந்தோட்ட சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து எடுத்துரைப்பு



இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பது குறித்து சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்கவுடன் ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் சுப்பையா ஆனந்தகுமார் நேற்று கலந்துரையாடியுள்ளார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநராக நவின் திசாநாயக்க நியமிக்கப்பட்டமைக்கு ஆளுநர் அலுவலகத்துக்கு நேரில் சென்று வாழ்த்து தெரிவித்த சுப்பையா ஆனந்தகுமார், இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

இந்த மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் காணப்படும் பல்வேறு குறைபாடுகள் மற்றும் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பாடசாலைகள் எதிர்கொண்டுள்ள சிக்கல்கள் மற்றும் தமிழ் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை குறித்தும் கலந்துரையாடினார்.

அதேபோன்று பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள தோட்டத்தொழிலாளர்களுக்கு தோட்டங்களில் பயன்படுத்தப்படாதுள்ள நிலங்கள், தரிசு நிலங்களை விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பெற்றுக்கொடுப்பது குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன், அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் சமூகநலத்திட்டங்கள் மற்றும் நிவாரணத் திட்டங்களில் இந்த மாவட்டங்களின் மக்களையும் இணைத்துக்கொள்வதுடன் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பெருந்தோட்ட மக்களுக்கு முன்னுரிமையளிக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார்.

அதேபோன்று வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் பெருந்தோட்ட மக்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்தல், உழைப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக்கொடுப்பது குறித்தும் பெருந்தோட்டங்களில் காணப்படும் சுகாதாரக் குறைப்பாடுகளுக்கு உரிய தீர்வை வழங்குவதன் அவசியத்தையும் ஆளுநரிடம் எடுத்துரைத்துள்ளார்.

# நானுஓயா கார் விபத்தில் பெண்ணொருவர் காயம்

*டி.சந்ரு, செ.திவாகரன்*

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியில் வெண்டிக்கோணர் பகுதியில் நேற்று (04) செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கார் விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கொழும்பிலிருந்து நுவரெலியா வைத்தியசாலைக்கு தொழிலுக்காக சென்றிருந்த வைத்தியர் ஒருவரின் காரொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. சீரற்ற காலநிலை மற்றும் பனிமூட்டம் நிறைந்து காணப்பட்டமையால் வேகக்கட்டுப்பாட்டையிழந்த கார், வீதியோரத்தில் பயணித்த 25 வயதுடைய பெண்ணின் உடலில் மோதி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் வீதியில் நடந்து சென்ற பெண் காயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# ஆதிலிங்கேஸ்வரர் விக்கிரக உடைப்புக்கும் இந்து - பௌத்த சங்கத்துக்கும் நேரடித்தொடர்பு

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட செயற்பாட்டாளர் தவபாலன் குற்றச்சாட்டு

*வவுனியா நிருபர்*

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரக உடைப்புக்கும் இந்து - பௌத்த சங்கத்துக்கும் நேரடித் தொடர்பிருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட செயற்பாட்டாளர் எஸ்.தவபாலன் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் மாலை (03) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குற்றஞ்சுமத்தினார். அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் அண்மைக்காலமாக ஓர் அமைப்பு செயற்பட்டு வருகின்றது. அந்த அமைப்பு தொடர்பாக முகப்புத்தகத்தில் நான் பதிவேற்றம் செய்தமைக்காக வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளேன்.

இந்து - பௌத்த சங்கம் என்ற பெயரில் அண்மைக்காலமாக ஆலய திருவிழாக்களில் நிர்வாகத்தினரின் அனுமதியின்றி பதாகை கட்டப்பட்டு வருகின்றது. இந்து -பௌத்த சங்கம் என்று இயங்கும் குறித்த அமைப்பானது ஐக்கிய தேசியக் கட்சியைப் பின்புலமாகக் கொண்டதாகும். குருமண்காடு பிள்ளையார் ஆலயத்தின் முன்னால் இருந்த தாகசாந்தி நிலையத்தில் கூட இந்த அமைப்பு தனது பதாகையை போட்டிருந்தது. இதனை அவதானித்த நான், இந்த இந்து - பௌத்த சங்கம் என்கின்ற அமைப்பு தேவையற்ற வகையில் தமிழர்களுடைய சைவ ஆலயங்களில் இந்த பதாகைகளைத் தொங்கவிடுவது பௌத்தமயமாக்கலை ஏற்படுத்தவும் தேவையற்ற வகையில் மதங்களுக்கிடையில் பிரச்சினையை ஏற்படுத்தவும் என்ற அடிப்படையில் முகநூலில் பதிவேற்றியிருந்தேன்.

அதற்காக இந்த அமைப்பு சார்ந்து இயங்கும் சில நபர்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து நான் விசாரணைக்குட்படுத்தப்பட்டு அதற்கான வாக்குமூலம் என்னிடமிருந்து பெறப்பட்டது. உண்மையில் இந்த அமைப்பு அண்மைக்காலமாக கணிசமான ஆலயங்களில் இந்தப் பதாகைகளை




தொங்கவிடுவதைக் காண்கின்றோம்.

முற்று முழுதாக தமிழர் தாயகத்தில் பௌத்த மயமாக்கலை மேற்கொள்வதற்காக திட்டமிட்டு இயங்கும் அமைப்பாகவே இதனை நாம் பார்க்கின்றோம். வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தினுடைய விக்கிரக உடைப்புக்கும் இந்த அமைப்புக்கும் நேரடி தொடர்பு இருப்பதாக நாம் குற்றச்சாட்டை முன்வைக்கின்றோம்.

நாங்கள் பௌத்த மதத்துக்கோ அதன் இனத்துக்கோ எதிரானவர்கள் அல்லர். பௌத்தம் போதிக்கும் சிந்தனைகளை சிங்களவர் பின்பற்றியிருந்தாலே தமிழர் தாயகத்தில் இவ்வாறான ஆக்கிரமிப்புகள் இடம்பெறாது என்பது எங்களுடைய கருத்து.

மேற்குறித்த அமைப்பானது ஐக்கிய தேசியக் கட்சியைப் பின்புலமாகக் கொண்டு செயற்படுகின்றது. ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர்தான் குறித்த அமைப்பு தீவிரமாக செயற்பட்டு வருகிறது. பௌத்தமயமாக்கலை ஏற்படுத்துவதற்காகவும் மத நல்லிணக்கம் என்ற போர்வையில் பௌத்தத்தை முன்னிலைப்படுத்துவதற்காகவுமே இந்த அமைப்பு செயற்படுகிறது. பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்திலும் இதனைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன்.

வவுனியா, குருமண்காடு சித்தி விநாயகர் ஆலயத்தின் தாகசாந்தி நிலையத்தில் இந்த அமைப்பின் பதாகையை அனுமதி பெறாது தொங்கவிடப்பட்டிருந்த நிலையில், ஆலயத்தின் உப செயலாளர் அதனை அகற்றியிருந்தார். அவர் பொலிஸாரின் துணையுடன் மிரட்டப்பட்டு ஆலய நிர்வாக அனுமதி இல்லாமல் மீளவும் பதாகைகளைக் கட்டியுள்ளார்கள். நந்திக் கொடிகள் காணப்பட்ட இடத்தில் வீதிக்குரிய இடம் எனக் கூறி அப் பதாகை கட்டப்பட்டுள்ளது. இதனை ஏற்க முடியாது.

வவுனியாவில் வெடிவைத்தகல்லை ஆக்கிரமித்து கச்சல்சமனங்குளம் என்ற பெயரில் புதிய விகாரை அமைக்கப்பட்டுள்ளது. தையிட்டியில் தனியார் காணியில் அடாத்தாக விகாரை கட்டப்பட்டுள்ளது. குருந்தூர் மலையில் நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி விகாரை கட்டப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழர் தாயகத்தில் பௌத்த ஆக்கிரமிப்பு இடம்பெற்றுவரும் நிலையில், வவுனியா மாவட்டத்தில் பௌத்தமயமாக்கலை நடைமுறைப்படுத்த இந்த அமைப்பு நடவடிக்கை எடுத்து வருகின்றது. வவுனியாவில் பல நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான அமைப்பின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சி பௌத்த மயமாக்கலை நடைமுறைப்படுத்த முயல்கிறது. இதனை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். அனுமதிக்கவும் முடியாது -எனவும் தெரிவித்தார்.





கேஜி பிலிம்ஸ் தயாரிக்கும் 'பொந்தவூ சிஹினய' என்ற சிங்களத் திரைப்படத்துக்கான பூஜை, தயாரிப்பாளர் டபிள்யூ.ஜீ. கருணாதாச தலைமையில் கொழும்பு பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கதாநாயகன் சஞ்சய முற முட லி, கதாநாயகி பூர்விகா ராஜசிங்கம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.
படங்கள்: எம்.நசார்

# பொல்கொடுவ புனித அந்தோனியார் ஆலயத்தின் 125 ஆவது ஆண்டு விழா



*பேருவளை நிருபர்*

பேருவளை, பொல்கொடுவ புனித அந்தோனியார் ஆலயத்தின் 125 ஆவது ஆண்டு பூர்த்தி விழா நேற்றுமுன்தினம்(03) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கலந்துகொண்டார்.

இதேவேளை, இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சீனன்கோட்டை பள்ளிச் சங்கச் செயலாளர் ஷிஹாப், பொருளாளர் ஸவாஹிர், பள்ளிச்சங்க உறுப்பினர் இஹ்ஸானுத்தீன் (நளீமி) ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது பேராயருக்கு சீனன்கோட்டை பள்ளிச்சங்கம் சார்பாக நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

நினைவுச் சின்னத்தை பள்ளிச்சங்கச் செயலாளர் வழங்கிவைத்தபோது பேராயர் நன்றி தெரிவித்து தன்னுடைய இளமைக் காலத்தில் சீனன்கோட்டை வீதிகளில் தான் நடமாடிய பசுமையான நினைவுகளை நினைவுகூர்ந்ததோடு, எதிர்காலங்களில் நாம் இணைந்து ஒற்றுமையாக செயற்படவேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தினார்.

# மக்களைப் பாதிக்கும் மதுபானசாலைக்கு அனுமதிக்காதீர்!

## மன்னாரில் மக்கள் எதிர்ப்புப் போராட்டம்







*மன்னார் நிருபர்*

மன்னார் மாவட்டத்தில் நகரப் பகுதிக்குள் எந்த ஒரு மதுபான சாலைக்கும் அனுமதி வழங்கவேண்டாம் எனக் கோரிக்கை விடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை(04) மன்னார் நகர் பகுதியில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பிரஜைகள் குழு,மகளிர் அமைப்புகள்,அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவை இணைந்து ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டப் பேரணியானது மன்னார் நகர மத்திய பகுதியில் ஆரம்பமாகி நகர பகுதி ஊடாக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் வரை சென்றது.

மன்னாரில் கத்தோலிக்க இந்து ஆலயங்கள், பாடசாலை மற்றும் அதிக மக்கள் குடியிருப்பு அமைந்துள்ள பகுதியில் மதுபான சாலை அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருவதாகவும் குறித்த பகுதிக்கு அருகாமையில் வைத்தியசாலை பிரதான வீதி,தனியார் கல்வி நிறுவனங்கள்,மாற்றுத் திறனாளிகள் பாடசாலைகள் என பல தரப்பட்ட பொது நிறுவனங்கள் அமைந்துள்ள நிலையில், இவ்வாறான மதுபான சாலைக்கு அனுமதி வழங்குவதனால் அப்பகுதியில் விபத்துகள்,முரண்பாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் தெரிவித்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

''அனுமதி வழங்கும் அதிகாரிகளே! மக்களின் அழிவுக்குத் துணைபோகாதே!, 'மதுபான சாலை அமைப்பதற்கான அரச சட்டத்தை அமுல்படுத்து!, 'பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மதுபான சாலைகள் வேண்டவே வேண்டாம்!, 'புனித பாதையில் வன்முறை ஏற்பட வழி வகுக்காதே! போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர், இந்து ஆலய குருக்கள், சட்டத்தரணிகள், நகரசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மெசிடோ நிறுவன ஊழியர்கள், மாதர்சங்க உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்

குறித்த போராட்டத்தின் இறுதியில் மதுபான சாலை அமைக்கும் திட்டத்தை நிறுத்தக் கோரியும் மன்னார் நகரப் பகுதியில் மதுபான சாலைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என்ற கோரிக்கையின் அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்புவதற்கான மகஜரும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



தென்னிந்தியாவில் இயங்கும் சிவபுரம் அந்தணர் பாடசாலைக் கிளையை திருக்கேதீஸ்வரத்தில் ஸ்தாபித்த சிவபுரம் ஸ்ரீகண்ட சிவாச்சாரியார் கொழும்பு ஸ்ரீ வித்யா குருகுல ஸ்தாபகர் கலாநிதி சிவ ஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மாவுடன் குருகுல அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடினார். இதன்போது ஸ்ரீகண்ட சிவாச்சாரியாரை பாபு சர்மா பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். இந்நிகழ்வில் எஸ்.சிவநேசன் சிவாச்சாரியாரும் பங்கேற்றிருந்தார்.

# மத - மொழி வாதங்களே நாட்டின் வீழ்ச்சிக்கு பிரதான காரணம்

## சிவசேனை அமைப்பின் தலைவர் தெரிவிப்பு



*சாவகச்சேரி நிருபர்*

எமது நாடு வீழ்ச்சியடைவதற்கு மதவாதமும் மொழி வாதமுமே பிரதான காரணமாகும் என சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அண்மையில் சந்தித்து கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

உங்கள் வீட்டு வாசலில் பிள்ளையார் உள்ளார். அவரை வணங்காமல் வெளியே செல்லவும் மாட்டீர்கள். அப்படி இருக்கையில், அரசியலமைப்பில் மாத்திரம் ஏன் பிள்ளையாரை வைக்கவில்லை? இந்த நாட்டில் பத்தாயிரம் வருடங்களாக இந்து சமயம் உள்ளது.அவ்வாறு இருப்பதால் தான் நீங்களும் பிள்ளையாரை வணங்குகின்றீர்கள்.

அவ்வாறிருக்கையில், அரசியலமைப்பில் ஏன் பௌத்த சமயத்துக்கு முன்னுரிமை கொடுக்கிறீர்கள்?

அரசியலமைப்பில் இந்து சமயத்துக்கு முன்னுரிமை கொடுப்பது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய கொள்கை என சிலர் தெரிவிக்கின்றனர். 1972இல் பௌத்த சமயத்துக்கு முன்னுரிமை கொடுத்ததும் உங்களுடைய சுதந்திரக் கட்சி தான். எமது நாடு வீழ்ச்சியடைவதற்கு மதவாதங்களும் மொழி வாதங்களுமே பிரதான காரணங்களாக அமைகின்றன. நீங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையை மாற்றம் செய்வதானால் - மதத்துக்கு முன்னுரிமை கொடுப்பதானால் இந்து சமயத்துக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். அவ்வாறில்லையேல் எந்தச் சமயத்துக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டாம்.

முதன்முதலாக அமைதிப்படையை உருவாக்கியவர் புத்தர். போரை நிறுத்தவே புத்தர் இலங்கை வந்தார். ஆனால், இங்கு போரை முன்னெடுக்கும் பௌத்த சமயக் கொள்கையையே கொண்டுள்ளார்கள். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

பௌத்த சமயத்துக்கான ஏழாவது சங்கத்தை உடனடியாகக் கூட்டுங்கள். இந்துக்களுக்காக அதனை உடனடியாகக் கூட்ட வேண்டும். அறக் கோட்பாடு, வினைக் கோட்பாடு, தர்மக் கோட்பாடு இவை மூன்றையும் நிலை நிறுத்தும் போதுதான் இந்த நாட்டில் பௌத்த சமயம் வாழும். இப்போதிருப்பது பௌத்த சமயம் அல்ல என்றும் தெரிவித்தார்.

# உயரப்புலம் பகுதியில் ஆயுதங்கள் மீட்பு



மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உயரப்புலம் - அடைக்கலநாயகி தெருவில் உள்ள காணியில் இருந்து நேற்று(04) ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த காணி உரிமையாளர் காணிக்குள் குழியொன்று வெட்டிய போது ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் இருந்ததை அவதானித்துள்ளார். இந்நிலையில், இவ்விடயம் தொடர்பாக அவர் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

அதனடிப்படையில் அங்கு சோதனையிட்ட போது ரீ-56 ரகத் துப்பாக்கிகள், தோட்டாக்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. மானிப்பாய் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ශ්‍රී ලංකා මහ බැංකුව / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA

### நாணய மாற்று விதம் (04.07.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 199.0339 | 211.7253 |
| கனேடியன் டொலர் | 225.1058 | 239.1003 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40.7809 | 44.0499 |
| யூரோ | 326.2716 | 344.9700 |
| ஜப்பான் யென் | 2.0696 | 2.1863 |
| சிங்கப்பூர் டொலர் | 220.9993 | 234.3040 |
| ஸ்ரேலிங் பவுன் | 379.8770 | 400.7031 |
| சுவிஸ் பிராங்க் | 331.8911 | 353.7412 |
| ஐ.அ. டொலர் | 299.8709 | 314.9879 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 817.3060 |
| குவைட் | குவைட் தினார் | 1.002.1995 |
| ஓமான் | ஓமான் றியால் | 800.3330 |
| கட்டார் | கட்டார் றியால் | 84.5474 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 82.1556 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 83.8914 |







டேலண்ட் ஹப் அக்கடமியின் (Talent Hub Academy) பட்டமளிப்பு விழா கொழும்பு நெலும் பொக்குணவில் மேற்படி நிலையத்தின் பணிப்பாளர் பஸ்லியா றமீஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் மலேசியாவின் உயர் ஸ்தானிகர் பாதில் ஹிஷாம் பின் ஆதம் மற்றும் அவரது பாரியார் சலினா மொஹம்மட் யூசுப் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர். இதன்போது சுமார் 260 மாணவர்கள் பிரதம அதிதி மற்றும் கௌரவ அதிதிகளிடமிருந்து விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர்.

# பஸ் தரிப்பிடம் திறந்துவைப்பு




சம்மாந்துறை செய்தியாளர்

சம்மாந்துறை உயர்தொழில்நுட்பவியல் கல்வி நிறுவன (ATI) பணிப்பாளர் எஸ்.எல்.முஸ்தபாவின் ஆலோசனையின்கீழ் நஜா பவுண்டேசன் அமைப்பின் நிதிப்பங்களிப்புடன் முதலாம் வருட உயர்தேசிய ஆங்கில டிப்ளோமா பகுதிநேர மாணவர்களின் ஒத்துழைப்புடன் சம்மாந்துறை உயர்தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் முன்பாக பிரதான பாதையில் அமைக்கப்பட்ட பஸ்தரிப்பிடம் திறக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (04) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை உயர்தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.எல்.முஸ்தபா, சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனிபா, சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எச்.எம். நவாஸ், நஜா பவுண்டேசன் அமைப்பின் தலைவர் எஸ்.எம்.நபீல், சம்மாந்துறை உயர்தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் ஆங்கில கற்கைத்துறை பொறுப்பாளர் எம்.பிறெளசாட், கணக்கியல்துறை பொறுப்பாளர் பெரோஸ், தகவல் தொழில்நுட்ப துறை பொறுப்பாளர் ஏ.ஏ.எம்.மதீஹ், அதிபர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

முதலாம் வருட உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா மாணவர்களின் பாடத்திட்டத்தில் உள்ள சமூக பொறுப்புணர்வு குறித்த குழு செயற்றிட்டத்துக்கு ஏற்ப இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு மக்கள் பாவனைக்கென திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பலத்த காற்று காரணமாக குடியிருப்புகளுக்கு சேதம்

தோப்பூர்

தோப்பூர் பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை (04) திடீரென வீசிய பலத்த காற்றுடன் கூடிய மினி சூறாவளி காரணமாக பாடசாலை மற்றும் குடியிருப்புகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

தோப்பூர் அல்-ஹம்றா மத்திய கல்லூரியின் இரண்டு மாடிக் கட்டடத்தின் மேல் கூரையின் சீட் காற்றின் காரணமாக பறந்து கீழே விழுந்துள்ளதோடு சில வீடுகளின் கூரைகளும் பறந்துள்ளதையும் காண முடிகின்றது.





வேலைகளுக்கு அடிக்கப்பட்டிருந்த தகரங்கள் பறந்துள்ளதுடன் தகரத்தினால் அமைக்கப்பட்டவைகளும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பலத்த காற்று காரணமாக வாழை மரங்கள் முறிந்து விழுந்து பொருளாதார ரீதியாக பயிர்ச்செய்கையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஒரு இலட்சம் தொழில் வாய்ப்பில் உள்வாங்கப்பட்டோருக்கு நியமனம்

மட்டக்களப்பு

ஒரு இலட்சம் வேலை வழங்கும் அரச கொள்கைத்திட்டத்தின் கீழ் பல்நோக்கு அபிவிருத்தி அலுவலக உதவியாளர்களாக நியமிக்கப்பட்டு அரச அலுவலகங்களில் பயிலுனர்களாக பணியாற்றிவந்தவர்களுக்கு மட்டக்களப்பில் நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கடமையாற்றிவந்த குறித்த பயிலுனர்கள் 32 பேருக்கும் அலுவலக உதவியாளர் சேவையின் தரம் (3) இன் பதவிக்கான நியமனக் கடிதங்கள் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவினால் செவ்வாய்க்கிழமை(04) மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

கடந்த 3 வருட கால பல்நோக்கு அபிவிருத்தி அலுவலக உதவியாளர்களாக கடமையாற்றியவர்களுக்கே இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதன்போது அரசாங்க



அதிபர் உரையாற்றுகையில், புதிதாக நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் நேர்மையாகவும் நீதியாகவும் கடமைகளை செய்வதுடன் அரச விசுவாசியாக செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந், மாவட்டச் செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.மதிவண்ணன் உட்பட மாவட்டச் செயலக நிர்வாகக்கிளை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள் eastthamilan@gmail.com

# ஆலய உண்டியல் உடைத்து பணம் திருட்டு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள வலையிறவு மடத்துபிள்ளையார் ஆலய உண்டியலை உடைத்து அதிலிருந்த பணத்தை திருடிச் சென்றுள்ள சம்பவம் சனிக்கிழமை(01) அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஆலயத்தின் முன்னால் உள்ள ஆலய உண்டியலை இனந்தெரியாதோர் இரும்பு கம்பியால் தாக்கி உடைத்து அதிலிருந்த பணத்தை திருடிச் சென்றுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 'வேர்களைத் தேடும் விழுதுகள்' கௌரவிப்பும் பொதுக்கூட்டமும்



எம்.எஸ்.எம்.ஸாகிர்

ஸஹ்ரியன்ஸ் 2005/08 பிரிவு மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட 'வேர்களைத் தேடும் விழுதுகள்' கௌரவிப்பு நிகழ்வு கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் காரியப்பர் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (02) இடம்பெற்றது.

இந்நிகழ்வில், முன்னாள் அதிபர்களான ஏ.பீர் முஹம்மட், எம்.எம்.இஸ்மாயில், எம். முஸ்தபா உட்பட முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள், கல்லூரியின் தற்போதைய அதிபர் எம்.ஐ.ஜாபீர் ஆகியோர் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் ஸஹ்ரியன்ஸ் 2005/08 பிரிவு மாணவர்களின் ரீசேர்ட் வெளியீடும் இதன்போது இடம்பெற்றன.

ஸஹ்ரியன்ஸ் 2005/08 மாணவர்கள் கல்வி கற்ற காலத்தில் தனது பொன்னான நேரங்களை மாணவர்களுக்காக அர்ப்பணித்து சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் இம்மாணவர்களால் இதன் போது நன்றி கூறி, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் ஸஹ்ரியன்ஸ் 2005/08 பிரிவின் பிரதான ஒருங்கிணைப்பாளர் யூ.கே.எம்.றிம்சான் வரவேற்புரையுடன் தலைமையுரையாற்றினார். 2005/08 பிரிவு சார்பான மாணவர் உரையை முபாரிஸ் எம்.ஹனீபா மற்றும் ஸஹ்ரியன்ஸ் 2005/08 பிரிவு சார்பான நன்றியுரையை றௌசுல் இலாஹியும் ஆற்றினர்.



முதலாம் அமர்வு மதிய போஷணத்துடன் நிறைவு பெற்றதுடன் ஸஹ்ரியன்ஸ் 2005/08 பிரிவின் இரண்டாம் அமர்வு அட்டப்பள்ளம் அழகாபுரி பீச் ரிசோர்ட் எனும் இடத்தில் அன்றைய தினம் மதிய போஷணத்துடன் ஆரம்பமாகி, பாடல் போட்டிகள், சங்கீத கதிரைகள், பலூன் ஊதுதல் போன்ற விளையாட்டுகளும் சக மாணவர்களிடையே இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து வருடாந்தப் பொதுக்கூட்டம் இடம்பெற்றது. இப்பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. அதில் யூ.கே.எம்.றிம்ஸான், பொறியியலாளர் ஏ.சி.சுஜா, எம்.ஏ. ஆசிக், ஏ.எம்.சுஜா, எச்.எம்.முபாரிஸ், எம்.ஐ.எம்.றுபினாஸ், ஏ.ஏ.எம்.அஸ்லம், எம்.ஏ.எம்.சியாம், ஆர்.எம்.இம்தாத், ஏ.என்.எம்.முஸ்தஜப், எம்.ஏ.எம்.இர்பான், ஏ.ஆர்.அஹமட் பிர்னாஸ், ஏ.ஆர்.முஹமட் பிறோஸ், எம்.எல்.எம்.றௌசுல் இலாஹி, பொறியியலாளர் ஏ.எம்.இஸட். சிமர் ஆகிய 15 பேர் புதிய உயர் பீட உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.



மட்டக்களப்பு பட்டிருப்பு கல்வி வலயம் நடத்திய வலயமட்ட சிறந்த பாடசாலைக்கீத போட்டி – 2023 போட்டியில் மட் /பட் குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயம் முதலிடத்தை பெற்றுக்கொண்டது. இதில் பங்குபற்றிய மாணவர்கள், பயிற்றுவித்த ஆசிரியர் திருமதி கீ.கௌரிபாலன் ஆகியோருக்கு பாடசாலை சமூகம் வாழ்த்துகளை தெரிவிக்கின்றது. (குருக்கள் மடம்)

# இளைஞனைக் காணவில்லை



மட்டக்களப்பு செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி வங்கி வீதி, தாழங்குடா – 03 ஐச் சேர்ந்த நாகேஸ் டினோ (30வயது) மனநலம் பாதிக்கப்பட்ட ஆண் ஒருவரை ஜூலை 01ஆம் திகதியிலிருந்து காணவில்லை என உறவினர்களால் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

03ஆம் திகதி திங்கட்கிழமை அக்கரைப்பற்றிலுள்ள பஸ் தரிப்பிடம் ஒன்றில் குறித்த நபரை முச்சக்கரவண்டி ஓட்டுனர் ஒருவர் அவதானித்துள்ளதாகவும் அவரை யாராவது அவதானித்தால் காத்தான்குடி பொலிஸ் நிலைய 065 – 2246595 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தெரியப்படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# தொலைத்தொடர்பு கோபுரம் விழுந்து ஐவர் வைத்தியசாலையில்

திருமலை, கிண்ணியா செய்தியாளர்கள்

திருகோணமலை மாவட்டம் கந்தளாய் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தொலைத்தொடர்பு கோபுரம் தபாலக அலுவலகம் மீது விழுந்ததில் ஐவர் காயமடைந்துள்ளதாக தெரிய வருகின்றது.

குறித்த சம்பவம் செவ்வாய்க்கிழமை (04) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

வேகமாக வீசிய காற்றினால் கந்தளாயில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தொலைத்தொடர்பு கோபுரமே தபாலக கட்டட அலுவலகத்தில் விழுந்துள்ளதாகவும் அங்கு கடமையாற்றிய ஐந்து பேர்வரை காயமடைந்துள்ளதாகவும் இவர்கள் ஐவரும் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக



வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இதனால் குறித்த பகுதியில் தொலைத்தொடர்பு சேவை வசதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

# திருகோணமலை றோட்டரிக் கழகத்தின் 45ஆவது தலைவர் பதவியேற்பு நிகழ்வு




கிண்ணியா செய்தியாளர்

திருகோணமலை றோட்டரிக் கழகத்தின் 45ஆவது தலைவராக வைத்தியர் சௌந்தரராஜன் பதவியேற்கும் நிகழ்வு டைக் வீதியில் உள்ள றோட்டரிக் கழக அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை(02) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்தியர் என்.வர்ணகுலேந்திரன்(கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாக சிரேஷ்ட விரிவுரையாளர்), சிறப்பு விருந்தினராக பிராஜ் கண்ட்ரி மண்டல்(துணை தலைவர், LANKA IOC PLC, திருகோணமலை) ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் திருகோணமலை றோட்டரிக் கழக தலைவர் நா.கிட்னதாஸ் கழகம் சார்பில் வரவேற்புரை நிகழ்த்தினார். அவரது காலத்தில், திருகோணமலை றோட்டரிக் கிளப் சிறப்பாக செயல்பட்டதாகவும் அதற்கு உதவிய தனது குழு உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி கௌரவித்தார். செயலாளர் எஸ்.ஜெய்சங்கர் 2022 – 2023ஆம் ஆண்டில் திருகோணமலை ரோட்டரிக் கழக நடவடிக்கைகள் பற்றி சுருக்கமான விளக்கத்தை கொடுத்தார்.

இதன்போது நோயாளி ஒருவருக்கு மருத்துவ உதவியாக 30ஆயிரம் ரூபா கையளிக்கப்பட்டதுடன் மான்களுக்கான




உணவளிக்கும் செயல்பாட்டுக்காக பிராஜ் கண்ட்ரி மண்டல் சார்பில் 03 இலட்சத்து 60ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

மேலும், கடந்த ஆண்டின் தலைவர் நா.கிட்னதாஸ் புதிதாக தெரிவான தலைவர் வைத்தியர் எஸ்.சௌந்தரராஜனுக்கு தலைமைப்பதவியை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

றோட்டரிக் கழகம் இன்னலுற்ற மக்கள் மத்தியில் சிறந்த சேவை புரிகின்ற அதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் பொருளாதார நிலையில் தேவை உள்ள மனிதர்களுக்கு, மற்றவர்களுடன் இணைந்து உதவ வேண்டும் என்றும் பிரதம விருந்தினர் கேட்டுக் கொண்டார்.

## வருடாந்த பரிசளிப்பு விழா



பாலமுனை செய்தியாளர்

ஏ.என்.ஆங்கிலக் கல்வி நிறுவனத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா திங்கட்கிழமை(03) பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலை திறந்த வெளியரங்கில் நடைபெற்றது.

இந்நிறுவனத்தின் பணிப்பாளர் பி.நஸ்றுதீன் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமா சபை அம்பாறை மாவட்டத் தலைவர் அஷ்-ஷெய்க் ஐ.எல்.எம்.ஹாஸிம் ஸூரி மதனி பிரதம அதிதியாகவும் தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஏ.எல்.ஐயூப், அம்பாறை பிரதேச செயலக கணக்காளர் எம்.எப்.பர்ஹான், ஸஹ்வா இஸ்லாமிய்யா கல்லூரியின் நிறைவேற்று அதிபர் ஏ.ஆர்.றமீன் மதனி, கிராம உத்தியோகத்தர் ஐ.எம்.றியால் ஆகியோர் அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது கடந்த ஆண்டு 2022இல் நடைபெற்ற ஆண்டு இறுதிப்பரீட்சையில் அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்கள் மற்றும் கல்விசார் விடயங்களில் திறமை காட்டிய மாணவர்களுக்கு அதிதிகளினால் பதக்கம் அணிவித்து நினைவுப்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தென்கிழக்கு பல்கலை மனித உரிமைகள் கற்கைநெறி மாணவர்களின் பிரியாவிடை



மாளிகைக்காடு செய்தியாளர்

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மனித உரிமைகள் கற்கைநெறி மாணவர்களின் பிரியாவிடை நிகழ்வு தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் அரசியல் விஞ்ஞானத் துறையினால் நடத்தப்பட்ட மனித உரிமைகள் குறுங்கால சான்றிதழ் பாடநெறிக்கான இரண்டாம் தொகுதி மாணவர்களின் இறுதிப் பரீட்சையும் பிரியாவிடை நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை (02) இடம்பெற்றது.

மனித உரிமைகள் கற்கை நெறி மாணவன் முஸ்தபா முபாறக் தலைமையில் தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகவும் விசேட அதிதிகளாக கலை கலாசார பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம்.பாஸில், பாடநெறியின் இணைப்பாளர் விரிவுரையாளர் ரி.எப்.சஜீதா, உதவி விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டதுடன் நிகழ்வில் கலந்து கொண்ட



பல்கலைக்கழக உபவேந்தர், பீடாதிபதி, விரிவுரையாளர் மற்றும் மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

மேலும், மூன்றாம் தொகுதி மாணவர்களுக்கான மனித உரிமைகள் குறுங்கால பாடநெறிக்கான சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகள் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் தெரிவித்தார்.

# உள்ளூர் உற்பத்திகளை தாய்லாந்து கூட்டுறவு சபையூடாக ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுப்பு

## வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

மட்டக்களப்பு செய்தியாளர்

எமது நாட்டின் உள்ளூர் உற்பத்திகளை தாய்லாந்து நாட்டிலுள்ள கூட்டுறவு சபைகளின் ஊடாக ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் அமைந்துள்ள அவரது அமைச்சின் அலுவலகத்தில் தமது அமைச்சினூடாக தாய்லாந்து நாட்டுக்கு முன்னெடுக்கப்பட்ட விஜயத்தின்போது நாட்டில் உள்ள கூட்டுறவு சபைகளின் அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாக திங்கட்கிழமை (03) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு



தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாய்லாந்து நாட்டில் தற்போது கூட்டுறவு அமைப்புகள் ஊடாக பாரிய முன்னேற்ற கரமான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. உலகின் பல நாடுகளில் இந்தக் கூட்டுறவு அமைப்பு பலமான ஓர் அமைப்பாக செயற்பட்டு வருகின்றது.

எமது நாட்டிலும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களை ஒரு பலமான அமைப்பாக முன்னெடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எமது அமைச்சினூடாக முன்னெடுத்து வருகின்றோம்.

எமது நாட்டிலிருந்து தேயிலை மற்றும் உள்ளூர் உற்பத்திகளை தாய்லாந்து நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கான எமது நாட்டின் கூட்டுறவு சபை ஊடாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் தாய்லாந்தில் இது சம்பந்தமான ஒரு மாநாட்டிலும் இலங்கைப் பிரதிநிதிகளுடன் நான் கலந்து கொண்டேன். இலங்கையில் உள்ளூர் உற்பத்திகளை தாய்லாந்து நாட்டிலுள்ள கூட்டுறவு சபைகளின் ஊடாக ஏற்றுமதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

# பழுகாமத்தில் நடைபெற்ற நடமாடும் சேவை

மட்டக்களப்பு செய்தியாளர்

கிழக்கு மாகாண ஆளுநரின் பரிந்துரைக்கமைய சமூக சேவை திணைக்களத்தினால் போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் ஆர். இராகுலநாயகியின் வழிநடத்தலின் கீழ் பழுகாமம் கலாசார மண்டபத்தில் அப்பகுதி மக்களின் நன்மை கருதி நடமாடும் சேவை ஒன்று செவ்வாய்க்கிழமை(04) நடைபெற்றது.

இதன்போது காணி பயன்பாடு, சமூகசேவை,





நோய்கொடுப்பனவு, விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவு, 70 வயதைப் பூர்த்தி செய்தோருக்கான கொடுப்பனவு, மருத்துவ முகாம், சுதேச வைத்திய சேவை, மூக்குக் கண்ணாடி வழங்கல் உள்ளிட்ட பல சேவைகளை அப்பகுதி மக்கள் பெற்றுக்கொண்டதுடன் மக்களின் பல அரச தேவைகளுக்கான தீர்வுகளும் அவ்விடத்திலேயே பெற்றுக் கொடுக்கப்பட்டன.

இதன்போது வெல்லாவெளி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச செயலக உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இச்சேவை மூலம் அப்பகுதியிலுள்ள பழுகாமம் - 01, பழுகாமம் - 02, விபுலானந்த புரம், மாவேற்குடா, வீரஞ்சேனை, வன்னி நகர் மற்றும் பெரியபோரதீவு, பட்டாபுரம் உள்ளிட்ட பல கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 500இற்கும் மேற்பட்ட மக்கள் நன்மையடைந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அறநெறிப் பாடசாலைக்கு அலுமாரி வழங்கிவைப்பு



மட்டக்களப்பு செய்தியாளர்

அவுஸ்திரேலியாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் வன்னிஹோப் தொண்டு நிறுவனம் இலங்கையில் அனைத்து இன மக்கள் மத்தியிலும் பல்வேறுபட்ட சமூகப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறுமூலைக் கிராமத்திலுள்ள காட்டித்தந்த எண்கோணேஸ்வரர் அறநெறிப் பாடசாலைக்கு திங்கட்கிழமை(03) சுமார் 50ஆயிரம் ரூபா பெறுமதியான அலுமாரி ஒன்றை வன்னிஹோப் நிறுவனம் அன்பளிப்புச் செய்துள்ளது.

அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாசிரியர் எஸ்.அர்சுன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வன்னிஹோப் நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எஸ்.றேகா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு அலுமாரியைக் கையளித்தனர். இந்நிறுவனம் இலங்கையில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் மத்தியிலும் கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம், அறநெறிப் பாடசாலைகளுக்கு சத்துணவுத்திட்டம் உள்ளிட்ட பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## போடியார் புலம்பல்!



**கனடிய பிரதமருக்கு எதிராக வவுனியாவில நடத்தின ஆர்ப்பாட்டத்த கண்டித்து அதுக்கு எதிராக தமிழ்த்தேசியம் பேசிர கட்சிகள் ஏன் எதிர்த்து போராட்டம் நடத்தல்ல எண்டு ஜனநாயக போராளிகள் கட்சியை சேர்ந்த பொடியன் கதிர் கேள்வி எழுப்பியிருக்கான் எலுவா? அடே பொடியா... அவங்க அதுக்கு போராடல்ல.. நீங்க என்ன சிங்களதேசியம் பேசிர கட்சியா? நீங்கதானே இப்ப ஐஞ்சி கட்சி கூட்டமைப்பு எண்டு விளக்கு கொழுத்திறயள்.. முடிஞ்சா ஒரு ஆர்பாட்டம் உங்கட கூட்டாளி ரெலோ, புளட், ஈ.பி.ஆர்.எல்.எவ். இவங்கள சேர்த்து செய்யுங்கடாம்பி பாப்பம் அதுக்கும் வழங்காத வக்கற்ற நீங்க ஏன் மற்றவருக்கு விரல் நீட்டிறயள்.! அத உட்டுத்து ஆரும் தோழர் மாருக்கு நினைவு செய்வாங்க போய் விளக்கேத்துங்க.!**

# சகோதர இனத்தவர்களுடன் ஒற்றுமையாக வாழப்பழக வேண்டும்: கரைந்துபோய்விடக் கூடாது

## மூத்த உலமா முப்தி யூசுப் ஹனிபா

மாளிகைக்காடு செய்தியாளர்

இனங்களுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்படும்போது மட்டும் தீர்வுகளைத் தேடிச் செல்கின்றவர்களாக இல்லாமல் எப்போதும் சக இனங்களின் சிவில் சமூகத் தலைவர்கள் மற்றும் மதப் பெரியார்கள் போன்றவர்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்பி ஏனைய சகோதர இனத்தவர்களுடன் கலந்து ஒற்றுமையாக வாழப் பழகிக்கொள்ள வேண்டுமே தவிர கரைந்து போய்விடக்கூடாது என மூத்த உலமாக்களில் ஒருவரான முப்தி யூசுப் ஹனிபா தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசலுக்கு அண்மையில் சென்றிருந்த அவர், சகோதர சமூகங்களின் உணர்வுகளை மதிக்கக் கூடியவர்களாகவும் சகவாழ்வைப் பேணி நடக்கவேண்டிய வழிமுறைகள் பற்றியும் கருத்து வெளியிட்ட அவர், பள்ளிவாசல் வளாகத்துடன் இளையவர்களின் தொடர்புகளை அதிகரிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

பள்ளிவாசலின் சுற்றுச்சூழல் மிக அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் பள்ளிவாசலில் இடம்பெறும் அண்மைக்கால நிகழ்வுகளை பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் கேட்டறிந்தவர், அச்செயற்பாடுகளை



பாராட்டிய அதேவேளை, அதற்காக பள்ளிவாசல் வளாகத்தில் விளையாடக் கூடிய விளையாட்டு ஒழுங்குகள் பற்றியும் இளையவர்களுக்கான பொழுதுபோக்கு சூழல் உருவாக்கப்பட வேண்டும் - என்றார்.

அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம். சபீஸ் தலைமையிலான நிர்வாகிகளுடன் கலந்துரையாடிய முப்தி யூசுப் ஹனிபா, அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் கடந்த வருட சாதாரண தரத்தில் கணித, விஞ்ஞான பாடங்களில் பெற்ற பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் இஸ்லாம் பாடத்தின் அடைவு மட்டம் மிகவும் வீழ்ச்சியடைந்திருப்பதாக புள்ளி விவரங்களை மேற்கோள் காட்டி தமது கவலையை வெளியிட்டதுடன் எமது பிள்ளைகளின் இஸ்லாம் பாடத்தின் மீதான வீழ்ச்சி பெற்றோராகிய எம்மை முதியோர் இல்லம்வரை அழைத்துச் செல்லும் அபாயம் உள்ளதை மனதில் வைத்து உடனடியாக சாதாரண தர மாணவர்களுக்கான நிகழ்ச்சிகளை வடிவமைத்து இக்குறையை நிவர்த்திசெய்ய பள்ளிவாசல் நிர்வாகம் செயற்பட வேண்டும் - என்றார்.

# மட்டு. முகத்துவாரத்தில் ஆற்றுவாய் வெட்டும் பணிகள் ஆரம்பம்



மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி, களுவாஞ்சிகுடி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட சுமார் 3000 ஏக்கர்களில் செய்கை பண்ணப்பட்டுள்ள அறுவடையை எட்டியுள்ள வயல் நிலங்கள் காட்டு வெள்ள நீர் நிரம்பி காணப்படுவதனால் மிகவும் பாதிக்கப்பட்டு அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை கருத்திற்கொண்ட மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி சபை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் ஆகியவை மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக மேற்கொண்ட கள விஜயத்தினை தொடர்ந்து மட்டக்களப்பு முகத்துவாரம் பகுதியில் ஆற்றுவாய் வெட்டும் பணிகள் செவ்வாய்க்கிழமை(04) இடம்பெற்றன.

குறித்த பணியானது, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்தின் மேற்பார்வையின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத், வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி அதிகாரசபை தலைவர் அருளானந்தராஜா ரமேஸ் உள்ளிட்ட மீன்பிடி அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இதனூடாக களப்புடன் கலந்துள்ள காட்டு வெள்ளநீர் கடலுக்குள் வடிந்து சென்றுவிடும் எனவும் வெல்லாவெளி, களுவாஞ்சிகுடி போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட விவசாயிகளது 3000 ஏக்கர்களில் செய்கை பண்ணப்பட்டுள்ள வயல்களில் அறுவடையை செய்யமுடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# பூப்பந்தாட்டப் பயிற்சிப் பட்டறை



கல்லடி செய்தியாளர்

உலக பூப்பந்தாட்டத் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பூப்பந்தாட்டச் சங்கம் மட்டக்களப்பு வலயக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து ஒவ்வொரு பூரணை தினத்திலும் நடத்தத் திட்டமிடப்பட்ட பூப்பந்தாட்ட பயிற்சிப்பட்டறையானது திங்கட்கிழமை(03) இடம்பெற்றது.

மட்டக்களப்பு பூப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர்.சீ.இராஜேந்திரா தலைமையில் இடம்பெற்ற இப்பயிற்சிப் பட்டறையில் மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 06இல் கல்விகற்கும் 100 மாணவர்களுடன் வெபர் உள்ளக அரங்கில் பயிற்சியாளர் கலாம்டீனின் வழிநடத்தலுடன் ஆரம்பமானது.

இந்நிகழ்வுக்கு மட்டக்களப்பு வலயக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். லவக்குமார், தொழிலதிபர் கிருஸ்டி கமல்ராஜ் கொன்சேகா, அருட்தந்தை ஜீவராஜ் மற்றும் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ரவீந்திரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலை உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பூப்பந்தாட்ட சங்கத்தின் வீரர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். அடுத்த பயிற்சிநெறி எதிர்வரும் ஓகஸ்ட் 1ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# கல்முனை வடக்கு சுகாதாரப் பிரிவில் டெங்கு விழிப்புணர்வு

பாண்டிருப்பு செய்தியாளர்

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் டெங்கு நுளம்பு பெருக்கம் தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் என்.ரமேஸ் வழிகாட்டலில் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்கு ஒழிப்பு செயலணிக் குழுவினர் இணைந்து டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் தொடர்பில் வீடு வீடாகச் சென்று பரிசோதனை செய்து மக்களை விழிப்பூட்டும் மற்றும் டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சுற்றுப்புறத்தை அசுத்தமாக வைத்திருந்தோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கல்முனை பிரதேசத்தில் சில நாட்களாக இடையிடையே மழை பெய்து வருகின்றது. இதனையடுத்து டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, துறைவந்தியமேடு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, மணல்சேனை ஆகிய கிராமங்களில் தொடர்ச்சியாக பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் டெங்கு ஒழிப்பு செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருளுடன் மூவர் கைது

கனகராசா சரவணன்

பொத்துவில் பொலிஸ் பிரிவிலுள்ள மூன்று பிரதேசங்களில் வெவ்வேறு சம்பவங்களில் கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவரை விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் செவ்வாய்க்கிழமை (04) கைது செய்துள்ளதாகத் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றையடுத்து சம்பவதினம் காலை பொத்துவில் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் பொத்துவில் நகர பகுதியில் 26 வயதுடைய ஒருவரை 350 மில்லிகிராம் கஞ்சாவுடனும் சியம்பலாண்டுவ பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய ஒருவரை 200 மில்லிகிராம் கஞ்சாவுடனும் கைது செய்தனர்.

அதேவேளை, அறுகம்பை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து உல்லை பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவரை கைது செய்து ஒப்படைத்துள்ளதாகவும் இந்த வெவ்வேறு சம்பவங்களில் கைதுசெய்யப்பட்ட மூவரையும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கஞ்சா வியாபாரிகளை காப்பாற்றிய எலியார்

## 11 கிலோ கஞ்சாவை உண்டதால் விடுதலை

சென்னை மாட்டான் குப்பம் பகுதியில் கஞ்சா வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவில் 11 கிலோவை எலி உண்டதால் குற்றப்பத்திரிகையில் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டை பொலிஸாரால் நிரூபிக்க முடியாமல் போயுள்ளது. இதனால் இரு குற்றவாளிகளை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

தமிழகத்தில் கஞ்சா பயன்பாடு அதிகரித்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. இருப்பினும், இதை மறுக்கும் தமிழக பொலிஸார் கஞ்சா வேட்டை எனக் கூறி கஞ்சா கடத்தலையும் விற்பனையையும் தடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த 2020ஆம் ஆண்டு சென்னை மாட்டான் குப்பம் பகுதியில் கஞ்சா வழக்கில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து 20 கிலோகிராம் அளவில் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இதுதொடர்பான வழக்கு சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள போதைப்பொருள் தடுப்புப் பிரிவு நீதிமன்றத்தில், கடந்த 03 ஆண்டுகளாக நடைபெற்று வந்தது. விசாரணையின்போது பொலிஸார் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில், 20 கிலோகிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தற்போது அதில் 11 கிலோ கஞ்சாவை எலி உண்டு விட்டதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். இதனால் அதிர்ச்சியடைந்த நீதிபதி, பொலிஸாரால் குற்றச்சாட்டை நிரூபிக்க முடியவில்லை எனக் கூறி, கஞ்சா வியாபாரிகள் இருவரையும் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கியுள்ளார்.

# ஈரானில் 6 மாதங்களில் 354 பேருக்கு தூக்கு

ஈரானில் 2023ஆம் ஆண்டு முதல் 06 மாதங்களில் மட்டும் 354 பேருக்கு அந்நாட்டு அரசு மரண தண்டனை நிறைவேற்றியுள்ளது. மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ள வேகம் கடந்த 2022ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் மிகமிக அதிகம் என்று நோர்வேயை மையமாகக் கொண்ட ஈரான் மனித உரிமைகள் அமைப்பு (IHR) எச்சரித்துள்ளது.

## 320 ஆண்டுகள் - 12 ஜனாதிபதிகள் - 10 பேரரசர்கள் - 2 குடியாட்சிகள்




# அச்சில் மூடுவிழா காணும் 'வெய்னர் ஷெய்துங்' பத்திரிகை

ஒஸ்ரியாவின் மிகவும் பிரபலமான பத்திரிகையும் உலகின் மிகப் பழமையான செய்தித்தாளுமான வெய்னர் ஷெய்துங் (Wiener Zeitung) இனி அச்சேறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

320 ஆண்டு கால வரலாறு கொண்ட பத்திரிகையின் அச்சுப் பதிப்பின் மூடுவிழா அந்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பத்திரிகையின் கடைசி அச்சுப் பிரதியில் வாசகர்கள் விவரம் அறிந்து கொள்ளும்விதமாக ஒரு விவரக் குறிப்பு இணைக்கப்பட்டிருந்தது. ஜூன் 29ஆம் திகதி வெளியான பத்திரிகையில் அந்தச் சுருள் இணைக்கப்பட்டிருந்தது. அதில் இனி வெய்னர் ஷெய்துங் இணையவழியில் மட்டுமே வெளியாகும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

வெய்னர் ஷெய்துங் பத்திரிகை கடந்த 1703ஆம் ஆண்டு ஓகஸ்ட் 8ஆம் திகதி முதல் செயற்பட்டு வருகிறது. அப்போது ஒஸ்ரியாவில் ஹொப்ஸ்பர்க் அரசாட்சி நடைபெற்றது. இந்நிலையில், நாளை மறுதினத்துடன் (ஜூலை 7ஆம் திகதி) வெய்னர் ஷெய்துங் அச்சு அலுவலகம் மூடப்படுகிறது.

1703இல் இந்தப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டபோது 'Wiennerisches Diarium' என்ற பெயரில் வெளியிடப்பட்டது. பல அரசாட்சிகள், ஜனாதிபதிகளைக் கண்ட இந்தப் பத்திரிகையின் கடைசிப் பிரதியின் முகப்புப் பக்கச் செய்தியில் ''320 ஆண்டுகள், 12 ஜனாதிபதிகள், 10 பேரரசர்கள், 2 குடியாட்சிகள், ஒரு செய்தித்தாள்'' என்று பெருமிதக் குறிப்பு இடம்பெற்றிருந்தது. இது வாசகர்களை உணர்வுபூர்வமாக நெகிழச் செய்தது.

**ஓய்ந்துபோன வரலாறு:**

வெய்னர் ஷெய்துங் பத்திரிகை ஒஸ்ரிய அரசுக்கு சொந்தமானது என்றாலும்கூட அதன் ஆசிரியக் குழு முற்றிலும் சுதந்திரமாக இயங்கியது. இருப்பினும் அண்மையில் ஒஸ்ரிய அரசு கொண்டுவந்த ஒரு சட்டத்தால் இப்பத்திரிகைக்கும் பொருளாதார ரீதியாக நெருக்கடி ஏற்பட்டது. இதனால் 63 பேர் கொண்ட ஆசிரியர் குழுவிலிருந்து பலரும் பணி நீக்கம் செய்யப்பட்டனர். கடைசியாக 20 பேர் மட்டுமே ஆசிரியர் குழுவில் இருந்தனர். சுவாரஸ்யமான நடையில் உள்ளூர், வெளிநாட்டுச் செய்திகள், கலாசார, வணிகச் செய்திகளை வழங்கி வெய்னர் ஷெய்துங் பத்திரிகை பெயர் பெற்றது.

ஒஸ்ரிய மக்களின் மனம் கவர்ந்த இந்தப் பத்திரிகை இனி இணையதளமாக செயற்படவுள்ள நிலையில் மாதம் ஒரு பிரதி மட்டும் அச்சிடுவது குறித்து நிறுவனம் ஆலோசித்து வருகிறது.

சமீபத்தில்தான் உலகப் புகழ்பெற்ற NatGeo இதழ் தனது அச்சுப் பிரதியை நிறுத்துவதாக அறிவித்தது. டிஜிட்டல் தளங்களின் ஆதிக்கத்தால் NatGeo அச்சு மூடுவிழா காண்பதாக நிர்வாகம் தெரிவித்திருந்தது. இந்நிலையில், 03 நூற்றாண்டுகள் கண்ட பத்திரிகையும் மூடுவிழா காண்பது அச்சு ஊடகங்களுக்கு வேதனையான செய்தியாக விடிந்துள்ளது.

உலக செய்திகள்

# கவலைக்கிடமான நிலையில் கடாபி மகன் ஹன்னிபல்



லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபியின் மகன் ஹன்னிபல் கடாபி (Hannibal Gaddafi), லெபனான் சிறையில் உண்ணாவிரதமிருந்து வந்த நிலையில் தற்போது உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

லிபியாவில் கடந்த 1969 முதல் 2011 வரை சர்வாதிகாரியாக செயற்பட்டவர் முஹம்மது கடாபி (Muammar Gaddafi). கடந்த 2011இல் அவருக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்து ஆட்சி கவிழ்க்கப்பட்டது. சொந்த ஊரான சிர்டேவில் பதுங்கியிருந்த கடாபியைப் புரட்சிப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

இந்நிலையில் கடாபியின் ஐந்தாவது மகன் ஹன்னிபல் கடாபி, லெபனான் ஷியா இமாம் மவுடா அல் சடார், லிபியாவின் திரிபோலிக்கு 1978இல் பயணம் மேற்கொண்டபோது காணாமல் போன வழக்கில், உண்மையை மறைத்ததாக தெரிவித்து பெய்ரூட்டிலுள்ள உள்நாட்டுப் பாதுகாப்புப் படைகளால் கடந்த 2015ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

சிரியா - லெபனான் எல்லையில் பிடிபட்ட ஹன்னிபல், லெபனான் சிறையிலடைக்கப்பட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அவரது கைது தொடர்பாக வழக்கு விசாரணை எதுவும் நடைபெறாததை கண்டித்தும் ஹன்னிபல் பல ஆண்டுகளாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார். இந்நிலையில் அவர் மேற்கொண்ட உண்ணாவிரதம் காரணமாக, அவருக்கு இரத்தத்தில் சர்க்கரை அளவு குறைந்து உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து ஹன்னிபல் உயிருக்கு ஆபத்தான நிலையில் லெபனான் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஹன்னிபலின் உடல் நிலை குறித்து அவரது வழக்கறிஞர் தெரிவிக்கையில்,

''47 வயதான ஹன்னிபலுக்கு தசைகள், கைகள் மற்றும் கால்கள் பலவீனமடைந்து, உடல்நிலை மோசமடைந்துள்ளன" என்று தெரிவித்தார்.

கடாஃபியின் மறைவுக்கு பின்னர் லிபியாவில் தற்போது ஏராளமான கிளர்ச்சிக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. தலைநகர் திரிபோலி 03 முக்கிய கிளர்ச்சிக் குழுக்களின் கட்டுப்பாட்டிலுள்ளது. லிபியாவில் ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர். உயிரைப் பாதுகாத்துக் கொள்ளவும் வறுமையிலிருந்து விடுபடவும் பெரும்பாலான மக்கள் புகலிடம் தேடி ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# "வன்முறையை நிறுத்துங்கள்"

## ஆபிரிக்க சிறுவனின் குடும்பத்தினர் கோரிக்கை

பிரான்ஸில் இடம்பெற்றுவரும் வன்முறைகள் அண்டை நாடுகளுக்கு பரவிவரும் நிலையில் அவ் வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் என அந்நாட்டு பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஆபிரிக்க சிறுவனின் பாட்டி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனிடையே, பிரான்ஸில் இடம்பெற்றுவரும் வன்முறை தொடர்பாக ஏலவே 2,800 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் நேற்று 157 பேருக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ஆஷஸிலிருந்து விலகும் லயன்



ஆஷஸ் தொடரின் இரண்டாவது டெஸ்டின் 2ஆம் நாள் ஆட்டத்தில் பந்தினை கேட்ச் பிடிக்க ஓடியபோது நைதன் லயனுக்கு ஏற்பட்ட உபாதையால் அவர் ஆஷஸ் தொடரிலிருந்து வெளியேறுகிறார்.

அவரது வலது காலின் பின்புறம் காயம் ஏற்பட்டுள்ளது. காயத்திலும் பேட்டிங் செய்த லயன் 13 பந்துகளை சந்தித்த அவர் 04 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அவர் பேட் செய்ததனால் அவுஸ்திரேலிய அணிக்கு கூடுதலாக 15 ரன்கள் கிடைத்தன. அதனால் அவுஸ்திரேலியா 370 ரன்கள் முன்னிலை பெற்று 43 ரன்களில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய அணிக்காக தொடர்ந்து 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வந்த லயன் 101ஆவது போட்டியில் பங்கேற்க முடியாமல் போனது ரசிகர்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. லயனுக்கு பதிலாக இன்னும் யாரையும் அணியில் சேர்க்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அநேகமாக டாட் மர்ப்பி லயனுக்கு பதிலாக சேர்க்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# வரலாற்று வெற்றியுடன் இரண்டாமிடத்துக்கு முன்னேறிய இலங்கை மகளிர் அணி



நியூசிலாந்து மகளிர் கிரிக்கெட் அணிக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் ஆட்டத்தில் இலங்கை மகளிர் அணி 08 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றி சாதனை படைத்தது. இதன்மூலம் நியூசிலாந்துக்கு எதிராக அனைத்து வகையான சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் இலங்கை மகளிர் அணி ஈட்டிய முதலாவது தொடர் வெற்றி இதுவாகும்.

காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வென்று நியூசிலாந்து மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கையில், நண்பகல் 12.00 மணியளவில் போட்டி மழை காரணமாக தடைப்பட்டது. இதன்போது நியூசிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கை 31 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 127 ஆக காணப்பட்டது.

தொடர்ந்து 3 மணித்தியாலங்கள் போட்டி மழை காரணமாக தடைப்பட்டதால் இலங்கை அணிக்கு 29 ஓவர்களில் 196 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி 26.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்று அபார வெற்றியீட்டியது.

இதன்படி, மகளிர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் 5ஆம் இடத்திலுள்ள நியூசிலாந்தை வெற்றிகொண்டதன் மூலம் 10ஆம் இடத்திலுள்ள இலங்கை அணி, மகளிர் சம்பியன்ஷிப்பில் 2ஆம் இடத்துக்கு அசுர முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

போட்டியின் ஆட்டநாயகி விருது மற்றும் தொடரின் சிறப்பாட்டக்காரர் விருதை இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவி சமரி அத்தபத்து பெற்றுக்கொண்டார்.

Sri Lanka Cricket
தேசிய பெண்கள் கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்
Dialog

# தேசிய மட்டத்தில் பதக்கங்களை சுவீகரித்து கிழக்கு மாகாண வீர வீராங்கனைகள் சாதனை





மாளிகைக்காடு நிருபர்

47ஆவது தேசிய விளையாட்டு விழாவின் கிரிக்கெட் போட்டிகள் எம்பிலிப்பிட்டிய மகாவலி விளையாட்டு தொகுதியிலும் கராத்தே போட்டிகள் சுகததாச உள்ளக அரங்கிலும் அண்மையில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் கிரிக்கெட் விளையாட்டுக்காக ஆண்கள் அணி தங்கப்பதக்கமும் பெண்கள் அணி வெள்ளிப் பதக்கமும் சுவீகரித்ததுடன், கராத்தே போட்டிகளில் 1 தங்கப்பதக்கம், 1 வெள்ளிப்பதக்கம் மற்றும் 1 வெண்கலப் பதக்கம் உட்பட மொத்தமாக 05 பதக்கங்களை கிழக்கு மாகாண வீர வீராங்கனைகள் சுவீகரித்து சாதனை நிலைநாட்டியுள்ளதாக கிழக்கு மாகாண விளையாட்டு பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ் தெரிவித்தார்.

# இளைஞர்கள் சபை வெற்றிக் கிண்ணம்: சம்பியனானது பாலமுனை அறபா விளையாட்டுக் கழகம்

மாளிகைக்காடு நிருபர்




பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இளைஞர்கள் சபை வெற்றிக்கிண்ணம் போட்டியில் ஒலுவில் இலவன் ஸ்டார் அணியை வீழ்த்தி பாலமுனை அரபா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியனாக தெரிவானது.

புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களைப் பெற்ற பாலமுனை அல்- அரபா விளையாட்டுக் கழகம் மற்றும் ஒலுவில் இலவன் ஸ்டார் விளையாட்டுக் கழகம் ஆகிய அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன. இதில் சம்பியனான அணிக்கு 30,000 ரூபா பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டதுடன், இரண்டாவது இடத்தைப் பெற்ற ஒலுவில் இலவன் ஸ்டார் விளையாட்டு கழகத்துக்கு 15,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் கலந்து கொண்டார். மேலும், அக்கறைப்பற்று மாநகரசபை உறுப்பினர் எஸ்.எம். சபீஸ், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்சில், அட்டாளைச்சேனை பிரதேச சபை உப தவிசாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா உட்பட ஊர் முக்கியஸ்தர்கள், கல்விமான்கள், வீரர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7